டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி



# தோழி விடுதூது

## இருபதாம் நூற்றாண்டின் வரலாற்று இலக்கியம்

'ஐந்திலக்கண வித்தகர்' பேராசிரியர்,

புலவர் ஆனா. நரசிங்கப்பெருமாள்

தமிழ்க் கல்லூரி வெளியீடு

O-18ΛΛNP27
N72
102894

O-18NwP2.T
N72
102894

R.O.B. (V) KV
B.No 167
22/12/72

# டாக்டர்
# கலைஞர் மு. கருணாநிதி
# தோழி விடு தூது

## மூலமும் குறிப்புரையும்

(இருபதாம் நூற்றாண்டின் வரலாற்று இலக்கியம்)

நூலாசிரியர், குறிப்புரையாசிரியர் :
"ஐந்திலக்கண வித்தகர்", பேராசிரியர்,
**புலவர் ஆனை. நரசிங்கப்பெருமாள்**
முதல்வர்,
புலவர் செந்தமிழ்க் கல்லூரி,
(மாலை வகுப்பு)
கோதண்ட ராமசாமி கோயில் தெரு,
சென்னை-33

புலவர் செந்தமிழ்க் கல்லூரி வெளியீடு

ஆனையப்பன் நரசிங்கப்பெருமாள் (1942)
புலவர் செந்தமிழ்க் கல்லூரி வெளியீடு.
முதற் பதிப்பு : 1972

உரிமை ஆசிரியருக்கு

விலை ரூ. 1–50

மூவேந்தர் அச்சகம், 37, சி. பெ. ச. தெரு, சென்னை–14.

# காணிக்கை

தன்னாட்சித் தமிழகம்

காண விரும்பும் தனிப்பெருந்தலைவர்

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை

இவ்வுலகுக்கு வழங்கிய,

அன்னை அஞ்சுகம், முத்துவேலர்

இவர்களின்,

திருவடித் தாமரைகளுக்கு.

# அன்னை அஞ்சுகம் வாழ்த்து

அஞ்சுகத் தெய்வமே ஆற்றல்சால் அன்னையே
நெஞ்சால் தொழுவேன் நினைந்து.

செந்தமிழ்த் தெய்வத்தின் சீர்சான்ற அன்னையே
வந்து பணிந்தோம் மகிழ்ந்து.

கலையுலகத் தெய்வத்தைக் காசினிக்குத் தந்தாய்
நிலைத்த புகழ்வளர்க நின்று.

நாடாளும் தெய்வத்தைப் பெற்றமையான் எந்தாயே
வாடாமல் நன்றிசொல்வோம் நன்கு.

எந்தலைவன் முத்தெனவே இங்கிருந்(து) ஆள்கின்றான்
செந்தமிழாய் வாழ்க சிறந்து.

எல்லோர்க்கும் நல்லவனை இவ்வுலகில் பெற்றதாயே
வல்லபுகழ் வாழ்க மகிழ்ந்து.

தன்னாட்சி காணும் தலைவனைப் பெற்றதாயே
என்றுமே பேர்வாழ்க இங்கு.

அவனிக்குத் தெய்வமே அன்னையே இந்தக்
குவலயத்தில் வாழ்கபுகழ் கொண்டு.

தலைவனின் சீர்பாடத் தாயே இருப்பேன்
நிலைத்த கவிபுனைவேன் நின்று.

தமிழன்னைக் கண்மணித் தாயே உலகின்
அமிழ்தே வணக்கம் அமைந்து.

# முத்துவேலர் வாழ்த்து

களிகொண்ட செந்தமிழின் காவலனை நாட்டில்
அளிகொண்ட கோமானை அன்பில்—குளித்தருளும்
முத்துவேலன் பெற்ருன் முழுதுணர்ந்த அன்ஞேன்பேர்
இத்தரையில் வாழ்க இனிது.

ஏற்றதோர் செந்தமிழின் ஏந்தலை இங்குள்ள
மாற்ருர் மதிக்கின்ற மாண்பினனை—ஊற்ருய்க்
கருத்தருளும் முப்பாலைக் கற்றமுத்து வேலன்
திருவுலகில் பெற்ருன் சிறந்து.

முத்துவேலா! சற்றுப்பார் முற்றுணர்ந்(து) உன்மகன்
இத்தரை ஆள்கின்ருன் இன்தமிழ்—வித்தகனுய்
வாழ்கின்ருன் இல்லார்க்கு வள்ளலாய் என்றுமுளான்
வாழ்வாய் புகழுள் மகிழ்ந்து.

மகிழ்கின்ருர் உன்மகனுல் மாநிலத்து மக்கள்
திகழ்கின்ருர் ஆட்சிச் சிறப்பால்—இகழ்வறியா
ஏந்தலைப் பெற்ற எழின்முத்து வேலனுன்னைச்
சாந்துணையும் எண்ணுவேன் சார்ந்து.

# வணக்கம்

பைந்தமிழ்க் காவலன் பண்பின் உறைவிடம்
ஐந்திணையும் கற்ற அருந்தெய்வம்—பைந்தமிழை

மூச்செனவே கொண்ட முதலமைச்சன் சீர்சான்ற
பேச்சில் தமிழ்மணக்கும் பேரறிஞன்—பேச்சினில்
ஏழையர் முன்னேற்றம் எக்காலும் கொண்டவன்
ஆழும் பகுத்தறி(வு) அண்ணலே—சூழுமோர்

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளனென்ற—வள்ளுவத்தின்
காட்டாய் விளங்கும் கலைஞன் புவியனைத்தும்
பாட்டாலே ஈர்க்கின்ற பாவல்லோன்

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி
தோழிவிடு தூது *(113—117)*

**இத்தகு தனிசிறப்பு வாய்ந்த தொண்டுள்ளத்**
**தூயவராகிய கலைஞர் அவர்களை,**
**உலகுக்கெல்லாம் அறிமுகப்படுத்திய,**
**பேரறிஞர் அண்ணாவின்**
**திருவடித் தாமரைகளுக்கு.**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்
பயின்று கொண்டிருந்தபோது,
1965-ம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப்
புரட்சிப் போராட்டத்தில் கலந்துகொண்ட
நூலாசிரியருக்கு,
அவர் தோன்றிய மாநிலமாகிய

**புதுவை அரசு அளித்த,**

**எச்சரிக்கை முடங்கல்**

No. F. (P. i) – 1. 16/65–66

GOVERNMENT OF PONDICHERRY

GENL. ADMN. (EDUCATION) DEPARTMENT

—: (K) :—

Pondicherry–1., the 22 Mar 1966

## MEMORANDUM

It has been brought to the notice of this Administration that Shri A. Narasingaperumal studying in the IVth year of the Pulavar Course in the Annamalai Uoniversity, had taken an active part in the anti-Hindi agitation. As per rules for the award of Scolarship, no student who involves in acts of misbehaviour would be grantedScolar ship. However, this being the first instance, the scholor is being allowed to enjoy the renewal of scholarship Sanctioned to him Vide General Administration Department letter No. F. (P. 1) 1.4/65-66 dated 7–11-1966.

The Scholar is strictly Warned that recurrance of such misconduct would entail in the Cancellation of scolarship.

To.
Shri A. Narasingaperumal
IV th year Pulavar Course,
Annamalai University
Annamalai Nagar.

Signed
A. M. Joseph
Under Secretaryto–
Government.

# மாநில சுயாட்சிப் போர் முழக்கம்

(எண்சீர் ஆசிரியம்)

புகழ் மன்னன் தமிழ்ச்சேரன் செங்குட்டுவன் ஆண்ட
பொன்னிகரும் தமிழ்நாடே இழிவேற்றல் நன்றோ
இகழ்வற்ற இராசராசன் வெற்றியுடன் ஆண்ட
எழுச்சியுடைத் தமிழகமே இழிவடைதல் உண்டோ
திகழ்வுற்ற தமிழ்நாடே! உன்மண்மேல் தீயோர்
தீயமொழி திணிக்கின்றார் விடுவோமோ நாமே
அகமுழுதும் சிறப்புடைய செந்தமிழின் சீரை
அழிக்கின்றார் வடநாட்டார்; இதுபொறுத்தல்இல்லை

பொறுத்திருத்தல் போதுமடா செந்தமிழா! சற்றே
போர்முகத்தில் புறங்கொடாததோளெடுத்துவாவா
வெறுத்ததெல்லாம் போதுமடா தமிழ்மறவா! இங்கே
வேலெடுத்து வாளெடுத்துத் தோளொடிக்க வா!வா!
அறுத்திட்டார் பிணம்போலத் தமிழகத்தைத் தீயோர்,
அட! இன்னும் ஏன் தயக்கம்? தன்னாட்சி வேண்டிச்
சிறுத்தைபோல் சீறிவா!வா! தமிழ்நாட்டின் தெய்வம்
திகழ்கின்ற கலைஞர்பின் செல்வோமே வா! வா!

செந்தமிழைத் தமிழ்நாட்டைத் தமிழராள வேண்டும்
சிறுமையற்ற செந்தமிழா! நடப்பதைப்பார் நீபார்
நந்தமிழைத் தமிழகத்தை வடவராளக் காண்பாய்
நமக்குள்ள நலஉரிமை இங்கொன்றும் இல்லை

சிந்தித்தல் போதுமடா சிங்கமெனச் சீறு
தீயெனவே எரிகின்ற கண்களினுல் காண்!காண்!
வந்ததெல்லாம் வரட்டும்வா! கோழையோ நாம்!நாம்
வரும் பார்!பார் தன்னுட்சிப் போர்!போர்!போர்!
வாரீர்.

ஊரெங்கும் தெருவெங்கும் இதேபேச்சு வேண்டும்
உரிமைக்குத் தன்னுட்சிப் போர்முழக்கம்வேண்டும்
பாரெங்கும் முழங்கிடுவோம் தன்னுட்சிக் கொள்கை
பாருக்குள் சிறப்புற்ற தமிழ்நாடு வெல்க!
பாராள வந்தோர்இங் திக்குப்பாய் போட்டார்
பைந்தமிழர் நாட்டினிலே வடவர்வாய் வைத்தார்
யாரிதனைப் பொறுத்திடுவார் தமிழ்நாட்டில் என்ற
அருந்தலைவர் கலைஞர்பின் செல்வோமே வாரீர்.

நாடாளு மன்றத்தின் பூச்சாண்டிப் பேச்சால்
நாமஞ்சோம் தன்னுட்சிப் போர்நடந்தே தீரும்.
வீடாளத் தெரியாமல் நாடாள வந்த
வீணர்க்கே ஒருநாளும் நாமஞ்சோம் அஞ்சோம்.
காடாளும் கள்வர்போல் நாடாள்வார்க் கண்டு
கனல்போலக் கொதிக்கட்டும் நம்கண்கள்; ஆமாம்
மாடாளும் ஆடாளும் தொழிலுடையீர்! வாரீர்!
வளர்கின்ற தன்னுட்சிப் போர்குதிக்க வாரீர்.

கூடிவிட்டார் தோழர்கள் குவிந்திட்டார் மக்கள்
கூக்குரல்கள் வானளவும் எழும்பினவே; இங்கே
வாடியுள்ள தமிழ்நாடு வாழுமினி நன்றே
வண்டமிழும் வளருமினி எனத்தமிழின் அன்னை

x

நாடிநின்ருள் நம்கலேஞ ரையென்ருல் கோடி
நலம்பயக்க எந்நாளும் வாழ்ந்திடுவோம் வாரீர்
தேடிநின்ற தன்ஞட்சி பெற்றிட்டார் என்னும்
சேதிகேட்டு மகிழ்வதுதான் எந்நாளோ தோழா!

இருந்தோர்கள் வந்தோர்கள் செல்வோர்கள் எல்லோர்
இடத்திலுமே தன்ஞட்சி யேவேண்டும் என்ருர்
இருந்தாலும் நின்ருலும் படுத்தாலும் அன்ஞர்
இதயத்தில் தமிழ்நாட்டுத் தன்ஞட்சி எண்ணம்
அருந்துகின்ற உணவினிலே பருகுகின்ற நீரில்
அருந்தமிழர் முகமொன்றே காண்பவராய் என்றும்
வருந்துகின்ருர் தமிழுக்குத் தமிழ்நாட்டுக் காக
வாழ்த்துகின்ரேம் இறைவனைப்போல் நற்கலேஞ
ரையே

போராட்டம் தமிழ்மக்காள்! போராட்டம் புத்தம்
புதியதொரு புறநானூ றுண்டாக்க வாரீர்
சீராரும் தமிழ்மகளின் கண்களிலே கண்ணீர்
சிங்கவீரா! சிலிர்த்தெழுவாய் சிதறட்டும் மாற்ருர்
பாராட்டு தமிழ்நாட்டை வணங்குதமி ழையே
பனியொழிக்கும் பகலவன்போல் சினமுடனே
வா!வா!

வாரீரோ என்றகுரல் கேட்கட்டும் எங்கும்
வருவீரே கடல்போல நம்கலேஞர் பின்னே.

இயற்றியவர்:
**தோழிவிடுதூது ஆசிரியர்**

# என்னுரை

இற்றைக்கு ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் புலவர் வகுப்பு பயின்று கொண்டிருந்த நன்னாளில் என் உள்ளத்தே கருவாகி உருவாகி உயிர்த்தெழுந்தது டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி "தோழி விடு தூது" என்னும் இலக்கிய வரலாற்றுக் காப்பியம்.

அது முதல் ஆறாண்டுகளாக எனக்குள்ள இயல்பான பொருளிடர்ப்பாட்டின் விளைவாகச் சிறப்புமிகு இச்செந்தமிழ் இலக்கியம் என் வீட்டுக்குள்ளேயே உறங்கிக் கிடந்தது. இனியும் அதற்கு உறக்கம் பிடிக்கவில்லை; எனக்கும் அதனை உறங்க வைக்கக்கூடிய சக்தி இல்லை. ஆகவே, பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறக்கப்பட்டுத் "தோழி விடு தூ"தினை விடுதலை செய்வித்தேன். ஆறாண்டுகளுக்கு முன்னர் பேதைப் பருவத்தைக் கொண்டிருந்த "தோழி விடு தூது" இப்போது மங்கையாகி உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கிறது. ஆம்.

இவ்விலக்கியத்தை நான் முதலில் நூறு கண்ணிகளில் [இரு நூறு அடிகள்] மட்டுமே இயற்றியிருந்தேன். காலம் மாறியது; கவிதை மீண்டும் வளர்ந்தது. இப்போது 586 அடிகளில் இந்நூல் வளர்ந்திருக்கிறது; கலைஞரின் சாதனைப் பட்டியல்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்வது போலவே.

இந்நூல் ஒரு வரலாற்றுக் காப்பியம் எனின் மிகையாகாது இருபதாம் நூற்றாண்டு வரலாற்றை, வரும் நூற்றாண்டு மக்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனியென உணர்த்துவது இந் நூலேயாகும். வரும் நூற்றாண்டு மக்கள் இவ்விலக்கியத்தைத் தம் உயிரினும் பெரிதாக மதித்துப் போற்றுவர் என்பது

திண்ணம் ஆனல்... நம் காலத்து மக்கள்...அதுதான் தெரிந்த கதையாயிற்றே... நான் வேறு சொல்ல வேண்டுமா?

பாட்டுடைத் தலைவராகிய டாக்டர் கலைஞர் அவர்களின் அருமை பெருமைகள் இந்நூலின்கண் தெளிவாக இயம்பப் படடுள்ளன. தமிழ் நாடு உள்ளவரை தமிழ் அழியாது; தமிழ் அழியாதவரை இந்நூல் அழியாது; இந்நூல் அழியாத வரை டாக்டர் கலைஞரின் புகழ் அழியாது என்பது உறுதி. சுருங்கக் கூறின் இந்நூல் தமிழன்னையின் திலகமாக என் றென்றும் திகழும்.

இளமை தொட்டு, டாக்டர் கலைஞர் அவர்களின் எழுத்தில் திளைத்தவன் நான்; பேச்சினில் நின்றவன் நான். அவர் எழுத்தும் பேச்சும் என்னைப் புலவனுக்கின; தமிழ்ப் பற்றினை ஊட்டின; கவிதைத்துறையைக் கைவரச் செய்தன; இலக்கணத் துறையில் நுண்மான் நுழைபுலம் ஊட்டின. ஆகவே, என்னை வாழ வைத்த தெய்வத்தை வாழ்த்த வேண்டிய கடமை என் உயிர் உள்ளவரை உண்டு. அதன் முதற்பயனே இச்சிறுநூல்.

டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழில் எத்துணைத் துறை உள்ளனவோ அத்துணைத் துறையினும் வல்லவர். உரை நடைத்துறையில் தமக்கெனத் தனி வழி வகுத்து உரைநடை வேந்தரானர். பாட்டெழுதிப் பாவேந்தரானர். நாடகம்; திரைக்கதை; வரலாற்றுக் கதை; சிறுகதை இவற்றின் முடி சூடா மன்னர் இவர். இத்துணைக் கலைகளிலும் வல்லவரே கலைஞர் எனப்படுவார். எனவே, அத்தனைத் துறைகளிலும் வல்லவர் ஒருவர் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறையே உலகினில் பிறப்பர் என்பது திண்ணம். பல்லாயிரம் ஆண்டு களுக்கு ஒரு முறை தோன்றக் கூடியவர் நம் தலைமுறையில் வாழ்கிருர். அத்தகு நனி சிறப்பு வாய்ந்த கலைஞர் அவர்களைத் "தோழி விடு தூது" பெருமையுறப் பாராட்டுகிறது.

இந்நூலின் பாட்டுடைத் தலைவராகிய டாக்டர் கலைஞர் அவர்களின்பால் கழி பெருங் காதல் கொண்டாள் என் கற்பனைத் தலைவி. தன் காதலைத் தோழியின் வாயிலாகத் தலை

வனிடத்தில் கூறி அனுப்புகிருள். அவள், கலைஞர் அவர்களைப் பிரமனுகக் காணுகிருள்; திருமாலாகத் துதிக்கிருள்; சிவனுக எண்ணுகிருள்; முக்கனியாக உருவகிக்கிருள்; இந்நூலைக் கற்பார், தலைவியின் சொல்லழகில் ஈடுபட்டுத் தம்மை மறப்பர்.

வள்ளுவனே அண்ணனுகக் காஞ்சியில் பிறந்தான் என்பது டாக்டர் கலைஞர் அவர்களின் திருவாக்கு. எனவே வானுலகக் கோயில் கொண்டிருக்கும் தமிழன்னை, கம்பனையும் இளங்கோவையும் இராசராசனையும் மீண்டும் தமிழகம் அனுப்புகிருள். அப்போது மூவரையும் அழைத்து ஒருருவில் பிறப்பீர் என ஆணையிட்டாள். அந்த ஆணையைத் தலைமேல் தாங்கிய மூவரும் ஒருருக்கொண்டு கருணுநிதியெனப் பெயர் கொண்டு பிறந்தனர் எனத் "தோழி விடு தூது" கூறுகிறது. இம் மூவரின் ஆற்றல் கலைஞரிடம் இயல்பாக அமைந்துள்ளமையால் நான் அவ்வாறு கற்பனை செய்தேன். இராசராசனின் இயல்புகளினுல் நாடாளும் திறமை கலைஞருக்கு உண்டாயிற்று. கம்பனும் இளங்கோவும் கலந்தமையான் தலைமைப் புலவராகக் கலைஞர் திகழ்கிருர். தோழி விடு தூது கலைஞர் அவர்களை, "புலமைத் தலைமைப் புலவன்" என உணர்த்தும்.

சென்னை, அண்ணுமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் புலவர் தேர்வு பயிலும் மாணுக்கருக்கும் பிறருக்கும் தூது இலக்கியங்களுள் ஒன்று பாடமாக அமைக்கப்பெறுகின்றது. அவ்வகை இலக்கியங்களுள் "தோழி விடு தூது" தன்னிகரற்றது; சுவை மிக்கது. இப்பல்கலைக் கழகங்களில் இந்நூல் பாடநூலாக அமைக்கப் பெறுதல் இன்றியமையாதது. பல்கலைக் கழகங்கள் இதனைச் செய்யுமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

காலங்கள் மாறுகின்றன; கருத்துக்கள் மாற்றம் அமைகின்றன; சில வேளைகளில் மாற்றப்படுகின்றன; கணக்கின்றிக் காப்பியங்கள் பிறக்கின்றன. இந்நிலைமை உலகமெங்கும் காணக்கூடிய பொது நிலையாகும். கால வெள்ளத்தால் அழி

யாத என்றும் நிலைத்த புகழுடைய இந்நூலை நானே இயற்றினேன் என இப்போது எண்ணிப் பார்த்தால் எனக்கே பெரு வியப்பாயிருக்கிறது. இந்நூல் தொடங்கிய நாள் முதல் முடியும் நாள் வரை எனக்கேற்பட்ட இடையூறுகள் பல. அவற்றால் எல்லாம் நான் சோர்ந்து போகா வண்ணம் என்னை காத்த தமிழன்னையின் திருவடிகளை மனமொழி மெய்களான் என்றென்றும் வணங்குவேன்.

அன்று முதல் இன்றுவரை என் முயற்சிகள் அனைத்தையும் போற்றி, ஊக்கம் அளித்து வரும் என்னுடைய நண்பரும், சென்னை மயிலாப்பூர் P. S. உயர்நிலைப் பள்ளியின் தமிழாசிரியரும் ஆகிய திரு. புலவர் தி. குமரசாமி அவர்களுக்கும் அவருடைய இளவல், அண்ணுசாலை மின்வாரிய இளநிலைப் பொறியாளர் திரு. தி. ஏகாம்பரன் B. E. அவர்களுக்கும் என்று என் நன்றி உரியது.

இந்நூலை வெளியிடும் புலவர் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்கு என் நன்றி உரியது.

இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத் துணைபுரிந்த சென்னை இராயப்பேட்டை மூவேந்தர் அச்சக உரிமையாளருக்கும் ஊழியர்களுக்கும் என் நன்றியை என்றென்றும் தெரிவிப்பேன்.

இந்நூல் வெளிவரத் துணைபுரிந்த அனைவருக்கும் என் நன்றி

என் நூலாகிய இந்நூலின் பாட்டுடைத் தலைவராகிய டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவடித் தாமரைகளை மனம் மொழி மெய்களான் வணங்குகிறேன்.

வணக்கம்.

சென்னை–17.
25–10–72.

உங்கள் அன்பை விரும்பும்,
நூலாசிரியன்.

# அறிஞர் அண்ணா வாழ்த்து

பாரோங்கு பேர்படைத்த பாவலர்கள் தம்நாவில்
பாடல் பெற்றுச்
சீரோங்கு செந்தமிழின் செல்வமகன் நற்கலைஞன்
சிறப்பைச் செப்ப
நீரோங்கு கடலருகே நிலைகொண்டு துயிலுகின்ற
நெஞ்சோய்! அண்ணா!
காரோங்கு நீர்த்துளிபோல் கவிமழைநான் பொழியவழி
காட்டு நன்றே.

# கலைஞர் மு. கருணாநிதி வணக்கம்

அண்ணாவின் பின்னிங்கே அருந்தமிழைக் காக்க
ஆருள்ளார் எனநினைந்தே உலகுகேட்ட போதில்
பண்ணுவான் சொல்லுக்கே; பணிசெய்வான் சீர்சால்
பைந்தமிழ்க்கே எனஎண்ணித் தமிழன்னை பூத்துக்
கண்ணார உயர்கருணா நிதியினையே கண்டாள்;
கலைஞனென்றாள் செந்தமிழின் கடலென்றாள்;
நன்றாய்
எண்ணியெண்ணிக் களிக்கின்றாள்; ஏத்துகின்றாள்
என்றால்
இவன்பெருமை எவருரைப்பார் வணங்குகின்றேன்
நன்றே.

'ஐந்திலக்கண வித்தகர்' பேராசிரியர்,

**புலவர் ஆனை. நரசிங்கப்பெருமாள்**

இயற்றிய,

# டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தோழி விடுதூது

## தமிழன்னை அழைக்கின்றாள்

1. சீர்வளரும் வானுலகில் செங்கதிராம் கம்பனை
நேர்வந்(து) அழைத்தொருவன் நின்றனன்—
பேர்வளரும்

2. பாமணக்கும் நல்லிளங்கோப் பாவலனை
ஆங்கொருவன்
நாமணக்க நின்றழைத்தான் நன்றெனவே—
பாமணக்கும்

3. தேவாரம் தேடியருள் செய்தான் இராசராசன்
நாவார வந்தழைத்தான் நல்லோன்ஓர்—பூவாழ்

---

1. வானுலகில் செங்கதிர் போன்றவனாகிய கம்பனை. கற்பனையில் சிறந்தவன் ஆதலின் செங்கதிர் எனப் பட்டான்.

2. நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் வழங்கியமையால், பாமணக்கும் பாவலன் எனக் கூறப் பெற்றனன்.

3. மறைக்கப்பட்ட தேவாரத்தைக் கண்டுபிடித்து நாட்டில் வழங்கச் செய்தவன் இராசராச சோழனேயாவான்

4. திருமங்கைக் கேள்வன்போல் செல்வமன்னன் பின்னே
வருகின்றான் காத்தவரை; வாழும் —இருவருமே
5. முன்போனார்; பாடல்சால் மூவரையும் கண்டோர்கள்
இன்பமெலாம் பெற்றாரேமே இப்பிறப்பில் —என்றார்

## மயங்கினார் விண்மகளிர்

6. அரம்பையர் ஆடுகின்றார் ஆங்கொருத்தி பாட
வரலாற்றுப் பெண்கள் மலர் தூய் —வருகென்றார்

---

தன்னால் கட்டப்பெற்ற தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் தேவாரத்தைப் பாடுதற்கும் இசைக்கருவி முழங்குதற்குமாக ஐம்பது பேர்களை அளித்து வெற்றி கண்டான் என்பது கல் வெட்டுச் செய்தி. சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடிய இறை யன்புப் பாக்களே தேவாரம் எனப்படும். ஆதலினால், இது மூவர்தேவாரம் என வழங்கலாயிற்று.

3-2. பூ வாழ் = தாமரைப் பூவில் வாழும்

"பூவெனப் படுவது பொறிவாழ் பூவே" என்பது காண்க.

1-2-3 —தமிழன்னையின் அழைப்பைச் சொல்ல வந்த காவலரே இங்கழைப்போர் எனப்படுகின்றனர்.

4-1 திருமங்கை = செல்வப் பெண், திருமகள்.

கேள்வன் = கணவன், திருமால்.

இராசராசன் திருமாலைப் போலப் பின்னே வருகிறான்; முன்னே செல்வோர் கம்பனும், இளங்கோவும், "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்பது ஆழ் வார் திருவாக்கு.

6. 2. இவ்வுலகில் பிறந்து செயற்கரிய செய்து வரலாறு படைத்து விண் மகளிராகியவர்கள் இங்கே வரலாற்றுப் பெண்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர்.

7. மாடத்து விண்மகளிர் வண்டுகளாம் கண்களோ
கூடலூடல் கேட்டங்கே கொஞ்சின—தேடுகின்றார்

8. வீழ்ந்து மயங்குகின்றார் மென்துகில் காணாமல்
தாழ்ந்து மறைக்கின்றார் தம்முடலைக் —கீழ்வீழ்ந்து

9. காட்சி அளிக்கும் கவினார் வளைகளை
மீட்கின்றார் காமத்தின் வீறென்பார் —மீட்டும்

10. உலகினில் தோன்றி உயர்கம்பன் சேர்வேன்
நிலவுமேல் ஆணையென நின்று —புலர்ந்தார்

11. இளங்கோத் துறவொழித் தின்பம் அடைவேன்
இளங்கொங்கை மேலாணை ஈதென்(று)
—உளங்கவல்வார்

12. தோளுடன் தாளிணை நோக்கி இடையினில்
வாளுறை கண்டு மயங்குவார் —ஆளன்

13. இவனினியன் மன்னன் இராசராசன் சேர்வேன்
சிவனரி மேலாணை செப்பித்—துவளுவார்

---

7. உள்ளக்குறிப்பைக் கண் காட்டும். ஊடலூடல் உள்ளக்குறிப்பைக் கண்கேட்டுக் கொஞ்சுகிறது மூவரையும் கண்டு. "கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாவதும் காட்டியதே" என்பது தஞ்சை வாணன் கோவை.

8. புகை முகந்தன்ன மாசில் தூவுடையே இங்கே மென்துகில் எனப்படுகிறது.

8. 9. மூவரையும் கண்டு மயங்க விண்மகளிரின் உடல் இளைத்தது. அதனால் மென்துகில் வீழ வெளித்தெரியும் உறுப்புகளை நாணத்தால் குனிந்து மறைத்தனர். கீழேவீழ்ந்த வளைகளை மீண்டும் மீண்டும் எடுக்கின்றனர்.

10. ஆணையென = ஐகாரக்குறுக்கம்.

13. சிவனரி = முக்கட்பெரியோனும் மூவடியால் மூவுலகளந்த பெருமானும்.

14. ஈர்க்கிடை போகா இளமென் முலையினர்
பீர்க்கு நிறந்தனைப் பெற்றனர் —சேர்க்கை

15. விரும்பிக் கலங்கினர் விண்மகளிர் ஓர்பால்;
பருகுதல்போல் பார்த்தவர் பாகாய் —உருகினர்

16. தானோக்கும் ஓர்மகனைத் தானோக்கும் மற்றொரு
மானோக்கி கண்டு மடமகளே —ஏனோக்கம்

17. இங்கெனக்கும் வில்லியென இன்று முளைத்தவளே
கங்குல் எழுமுன்உன் கண்பறிப்பேன்
—கொங்கையோ

18. ஈட்டிமுனை போல்குத்திட் டென்னையும் ஈர்க்குதடி
காட்டாத அங்கமெலாம் காட்டுகிறாய்–ஆட்டுக்குத்

19. தோலுரித்தாற் போலே துகிலின்றி நிற்கின்றாய்
நாலும் மறந்தனையோ நல்லாடை—காலுமறை

---

14. 2. பீர்க்கு = பீர்க்கம் பூ. விண்மகளிர் பீர்க்கம்பூ நிறப் பசலை பெற்றனர்.

சேர்க்கை = புணர்வு வேட்கை.

16. ஒருத்தி, மூவருள் ஒருவனை நோக்குகிறாள். இன்னொருத்தியும் அவனையே நோக்குகின்றாள். இதனை முன்னவள் பார்த்துப் பெருங் கோபம் கொள்கிறாள்.
தானோக்கும் என்பது தான் நோக்கும் என்று பிரிபடும்.
ஓர் மகனைத்தான் நோக்கும் என்றுணர்ந்து மகிழ்க.

19 1. நாலும் = அச்சமும் நாணமும் மடமும் பயிர்ப்பும்.

19. 2. காலு மறை = கால் கூட வெளியே தெரியாமல் நன்றாக மறைத்து மூடிக்கொண்டு.

20. பூட்டிவா இங்கிருந்து போமுதலில் என்றிட்டாள்
வாட்டமிலாள் அப்பெண் வடிவழகைக்
—காட்டுகிருய்

21. நீயுமெனக் கேட்டவளும் நின்றங்கே தன்னழகைக்
காயுங்கண் கொண்டுவந்து கண்டனள் —பாயும்

22. புனலாடை முற்றுமிலாப் பொன்னுடலைக் கண்டே
அனல்கொள் மெழுகானுள் ஆட்டம்
—எனக்குமிங்கே

23. வந்ததடி என்றுரைத்தோர் மாண்மகளைப்
புல்லினுள்
புந்திமாறி அன்னவளும் போய்விழுந்தாள்
—அந்நேரம்

---

20. 1. பூட்டி வா = எந்நாளும் எந்நேரமும் விழாத அளவுக்கு இறுக்கமாக உடை உடுத்தி வா.

23. மாண்மகள் = மாண்புடைய ஒருத்தி.

16–23. பெருங்கோபம் கொண்ட முன்னவள், பின்னவளைப் பெரிதும் தூற்றுகிருள். ஆடையின்றி நிற்கின்ருயே, வெட்கமில்லையோ உனக்கு? என உரைக்கின்ருள். பின்னவள் அமைதியாக உன்னுடலில் ஆடை வாழ்கிறதோ? நீயும் என்னைப் போலவே உடையின்றி நிற்கின்ருய் என்ருள். இது கேட்ட முன்னவள் தன்னுடலைக் காணுகிருள். இப்போது தான் அவளுக்குத் தன்னுடலில் ஆடையில்லை என்பது தெரிகின்றது. உடனே மயக்கத்தினுல் ஆங்கிருந்த வேருெரு பெண்ணை அணைத்தாள். அந்த வேருெரு பெண்ணே மயக்க நிலையில் இருப்பவள். தான் விரும்பியவன், தன்னை அணைத்தான் என்று கருகி அறிவு மயங்கிப் புணர்வு வேட்கையால் மாடத்தொருபுறம் சாய்ந்து தரைமிசை படிந்தாள்.

## வரவேற்ருள் கண்ணகி

24. செந்தமிழ்க் கோயிலின் சீர்சான்ற வாயிலில்
நந்தமிழ்க் கண்ணகி நன்றெென —வந்துநின்று

25. இன்சொல் மொழிந்தே இருகை வணக்கமும்
நன்குரைத்(து) அன்பால் நலமுசாவி —நின்றனள்

## வீற்றிருந்தாள் தமிழன்னே

26. அக்காலே கோயில் அரியணேயில் செந்தமிழ்த்தாய்
தக்கோர்கள் சூழத் தனியிருந்தாள் —எக்காலும்

27. எல்லோரும் போற்றும் எழின்மிகுதொல் காப்பியன்
வல்லோர் வணங்கிட வந்தமர்ந்தான்-சொல்லாரும்

28. நற்கபிலன் நல்வெள்ளி நப்பசலே நப்பண்ணன்
நற்சேந்தன் நக்கீரன் நன்ஞகை —நற்றமன்

29. ஆங்கிருந்தார் ஓர்பால்; அணிலாடு முன்றிலார்
மாங்குடியார் ஔவையார் மாமூலன் —ஓங்கு

30. முடத்தாமக் கண்ணி முடத்திரு மாறன்
முடங்கிக் கிடந்தவன் ஐயூர் —முடவன்

---

24. கண்ணகி = பேகனின் மனேவியல்லள்; சிலப்பதிகாரத் தெய்வம்.

26. ஒப்புயர் வற்றவளாய்த் திகழ்தலே இங்கே தனியிருத்தல் எனக் குறிப்பிடப்படுகிறது.

29. 1. பாட்டின் தொடராற் பெயர் பெற்றவர் அணிலாடு முன்றிலார்.

29. 2. மாங்குடியார் = மாங்குடி மருதனர்.

30. 2. முடங்கிக் கிடந்தவன் = முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்.

31. கருங்குழல் ஆதன் கருவூர்நன் மார்பன்
கரிகால் வளவன் கயமன் – கருவூரார்

32. ஆங்குளார் ஓர்பால்; அனைவரும் உள்ளனர்
ஓங்கு குறட்பா ஒருவனே — ஆங்கில்லை

## வள்ளுவன் எங்கே?

33. வள்ளுவன் எங்கென வான்மீகி கேட்டனன்
உள்ளுவேன் பல்லாண்டாய் ஓங்குபுகழ்—
வள்ளுவன்

34. எங்கேஎன் அன்னையே என்றனன் கல்லாடன்
சிங்கத் தமிழ்மக்காள் செப்புவேன் - பொங்குகின்ற

## அன்னையின் அருமை விடை

35. நீலக் கடலுடுத்த நீணிலத்து நன்மடந்தை
கோல முகமெனக் கொண்டாடும் — சீலமிகு

36. செந்தமிழ் நாட்டின் சிறப்பை அழித்தனர்
வந்தவர் சில்லோரே வல்லோரும் — சொந்த

37. மொழிமறந்(து) எந்நாளும் மூங்கை வடவர்
மொழியினில் பித்தேறி மூழ்கி — இழித்தனர்

38. தம்மொழி தம்நாடு தம்மக்கள் ஐயகோ
இம்மென்றால் பாடுவர் ஏழ்கோடி — பொம்மையாய்ப்

---

31. 2. கருவூரார் = சங்க காலக் கருவூர்ப் புலவர் பெரு மக்கள்.

33. 1. வான்மீகி = இவர் தமிழ்ப் புலவருள் ஒருவர். புறநானூற்றில் 358ஆம் பாடலுக்கு உரியவர்.

37. 1. மூங்கை = ஊமை.

39. போனுர் வடவர்கால் போய்வீழ்ந்து கும்பிட்டார்
தேனுறு பாய்கின்ற செந்தமிழில் —தானுகச்

40. சேர்த்தனர் நஞ்சாம் சிலசொல்லே இங்கிலேயில்
கூர்த்த மதியோர் குறைந்தனர் —ஊர்பேர்

41. வடமொழியாய் ஊண்பேரும் மாற இருந்தோர்
முடமாகிச் செத்தனர் முன்னுள் —மடத்துப்

42. பணங்கொடுத்துப் பைந்தமிழைப் பாரில் கெடுத்துப்
பிணமானுர் வாழ்ந்த பிணங்கள் —குணங்கெட்ட

43. இன்னேர்க்கு மன்னவரும் இன்துணே ஆயினுர்
என்செய்வேன் உய்வேனே இவ்வுலகில்
—என்றெண்ணி

44. நானிருந்த வேளே நரியன்ன சில்லோரும்
தேனிீனப்போல் ஆயினுர், செந்தமிழர் —கூனிக்

45. குறுகி வடமொழிக் கோல்கொண்டு போனுர்
சிறுகச் சிறுகவே சேர்த்தார் —அருப்பழி,

---

40. 2. கூர்த்த = நுண்மாண் நுழை புலமிக்க.

41. ஊண்பேர் = உணவின் பெயர். உணவின் பெயரும் வடமொழியாயிற்றே எனத் தமிழன்னே வருந்தினுள்.

42. 2. வாழ்ந்த பிணங்கள் = போலித் துறவிகள்.

44. 1. நரியன்ன சில்லோர் = வடமொழியே தமிழினும் சிறந்தது என்னும் கோமாளிகள்.

44 2. தேனிீனப்போலாதல் = வடமொழியே சிறந்தது என்போர் அக்காலத் தமிழர்க்குத் தேன்போலச் சுவையுடையராதல். இவரைக் கண்டால் கண்ணும் முகமும் மலர்ந்தனர் அக்கால மூடத்தமிழர்.

45. 1. தம் சொந்தக் கால்களே மறந்து வடமொழிக் கோலேக் காலாகக் கொண்டு நடந்தனர் தமிழர்.

46. கண்மூடிப் பொய்ம்மைகள் காட்டாற்று
வெள்ளம்போல்
மண்முழுதும் சேர்ந்தனவே மைந்தர்காள்
—எண்ணின்றிச்

47. சாதிகள் சேர்ந்தன சாத்திரங்கள் தோன்றின
மீதியென்ன பண்பற்ருேர் மேலானுர் —பாதிக்கு

48. மேற்பட்டோர் கீழானுர் வேந்தர்கள் ஆமென்ருர்
காற்பட்டால் கைப்பட்டால் கண்பட்டால்-காற்றில்

49. உடைபட்டால் வந்திடுமே ஓர்கோடிக் குற்றம்
தடமாறிப் போனுர் தமிழர் —நடைமெலிந்து

50. நல்லோர்கள் கல்வி நலமிழந்து நின்ருர்கள்
பொல்லார் நலமுற்றுப் பொய்விற்ருர்—செல்லாத

---

45. 2. அருப்பழி = ஒழியாப்பழிச் சொல். அருப்பழியைச் சிறுகச் சிறுகத் தமிழ்நாட்டில் தமிழர் சேர்த்தனர் என்றுரைக்க.

46. 2. எண்ணின்றி — எண்ணிக்கையிலடங்காமல்.

47. 2. மேலானுர் — மேல் சாதி என்று கூறிக்கொண்டோர்.

48. 1. கீழானுர் — கீழ்ச்சாதி என்று சொல்லப்பட்டோர்.

49. 2. தடமாறி: நேர்மை வழி மாறி. செந்தமிழர் நேர்மையை மறந்து தம்மினத்து மக்களுள் ஒரு சிலரைத் தொடுவதும் தீமை என்று வழிதவறி நடந்த மூடச்செய்கையை இது குறிக்கும்.

50. 2. பொய்விற்றல்: எல்லாக் கடவுளும் ஒன்ருயிருக்க ஒன்று மற்ருென்றினும் உயர்ந்தது என்ற பொய்யை நூல் வழிப் பரப்பல்.

51. காசாய்த் தமிழுணர்ந்தோர் காசினியில் ஆயினர்
ஏசாச் சிறப்படைந்தார் இந்நாட்டில் —பேசா

52. வடமொழி கண்டோர்; வயிறெரிந்து நின்று
குடத்துள் விளக்காய்க் குமைந்த —திடமற்ற

## வள்ளுவனே அறிஞர் அண்ணா

53. செந்தமிழர் வாழ்வில் சிறப்பினைச் சேர்த்திட
இந்நாட்டில் என்னவழி என்றாய்ந்தேன்
—பைந்தமிழ்

54. வாழ அழைத்தனன் வள்ளுவனை வந்தனன்
பாழுங் கதையைப் பகர்ந்தேன்நான் —பாழாகப்

55. போனார் தமிழர் பொலிவூட் டெனவுரைத்தேன்
தேனாகப் பாலாய்ச் சிரித்துப்பின் - ஏனம்மா

56. எங்குபோய் நான்பிறப்பேன் என்றான் பெரிதாகச்
சங்கம் வளர்த்த தமிழறிந்தோய் —சிங்கம்போல்

57. தோன்றிடடா காஞ்சியில் தூண்டமின்றி
என்றுரைத்தேன்
தோன்றினான் அன்னேனும் தொல்காஞ்சி
—ஆன்றகல்வி

58. அண்ணா துரையென ஆங்கு வளர்கின்றான்
கண்போன்றீர் என்றுரைத்தாள் காவலர்
—பண்ணார்

---

51. 52. ஊமை மொழியாகிய பேசா வடமொழி கண்டோர் தமிழ்நாட்டில் ஏசாச் சிறப்படைந்தனர். தமிழ்ப் பயின்றார் செல்லாத காசாய் மாறிய துயர நிலை.

57. 2. **ஆன்ற கல்வி — ஆன்று அவிந்து அடங்கிய கொள்கை.**

59. கிளிமொழியால் அன்னையும் கேட்டோர் மகிழ்ந்தார்
களிப்பினைக் காட்டினவே கண்கள் —குளித்தாள்

60. மகிழ்ச்சிக் கடலினில் மாண்புடை அன்னை
இகழ்ச்சி இனியில்லை என்று —திகழ்ந்தாள்

61. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிந்த
தவருப் புலவர் தணிந்தே —உவந்தனர்

## மூவரையும் அழைத்தாள்

62. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவென்ற —சொற்கள்

63. வழிநின்ற கம்பனை வாவென்ருள் வந்தோன்
விழிகளாற் கண்டங்கே வேண்டித் —தொழுதனன்

64. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவென்றே —தப்பாது

65. வாழ்ந்த இளங்கோவாம் வள்ளலை வாவென்ருள்
தாழ்ந்து பணிந்தான் தவத்தோனும் —தாழ்வின்றி

66. ஏழ்கடற்பார் ஆண்ட இராசராசன் வாவென்ருள்
வீழ்ந்து வணங்கினன் வேந்தனும்—வாழ்வுடைய

---

63. 2. விழிகளாற் காணல் — கண்கள் செய்த தவத்தால் தமிழ் அன்னையின் வடிவைக் காணல்.

65. 1. வள்ளல் — அண்ணனுக்கு அரசாட்சி நல்கிக் குணவாயிற் கோட்டத்து இருந்த நிலையுடைய இளங்கோ.

65. 2. தாழ்ந்து பணிதல் — அன்னையின் திருவடிக் காலில் தான் படைத்த சிலம்பைக் கண்ணுரக் கண்டு மகிழ்ப் பணிதல்.

66. ஏழ்கடற்பார் — ஏழு கடல் சூழ்ந்த இந்நிலவுலகு.

## பைந்தமிழ் அன்னை பகர்கின்றாள்

67. மூவரையும் நம்அன்னை முற்றும் அணைத்துப்பின்
பாவலர் கேட்கப் பகர்கின்றாள் —பாவல்ல

68. செந்தமிழில் வீரமுடன் சீர்காதல் பாடினீர்!
நொந்து புலம்புகின்றேன் நோய்தீர்ப்பீர்
—நந்தமிழ்

69. வாழ வளர வழியென்ன செய்வீரே?
பாழும் மொழியொன்று பாராள —வீழவோ?

70. வந்தார்க்குப் பாய்விரித்து வாழ்கின்ற வேசிமொழி
வந்தென்னை ஆளவும் வாழ்வரோ —செந்தமிழர்

71. என்செய்வேன் இவ்வுலகில் எவ்வகையில்
உய்வேனோ
நன்றாகச் சிந்தித்தேன் நாளெலாம் —இன்றோர்

## தமிழன்னையின் தனிமுடிவு

72. முடிவெடுத்தேன் கேட்பீர் முழுமையும் சொல்வேன்
துடிப்பார் தமிழர் துயராம் —அடிக்கடலில்

73. என்றுமிங்கே வாழும் இலக்கணமும் பாரினில்
நன்றும் இலக்கியமும் நற்றமிழில்
—தொன்மைபோல்

---

70. செந்தமிழர் வாழ்வரோ எனச் சொல்க.

72. 2. துயராம் அடிக்கடலில் தமிழர் துடிப்பார்.

73. 2. தொன்மை போல் — முன்னாளில் இருந்தது போல்.

74. வாழ்ந்திடல் வேண்டி வணங்குவேன்; நாட்டினில்
தாழ்ந்தது போதும் தலைநிமிர்வீர் —வீழ்ந்தங்கே

75. வெந்து கிடப்பார் விதிவகை என்றெண்ணிச்
செந்தமிழர் வாழ்வெலாம் சீர்பயக்க — வந்தனர்

## மூவரும் ஒருவனாய்ப் பிறப்பர்

76 மூவரிங்கே ஒருருவில் மூவரையும் காண்கிறேன்
பாவுலகில் கற்பனையில் கம்பனாகி — நாவுலகில்

77. சொல்லார் இளங்கோவாய்த் தூயதோர் வீரத்தில்
வில்லார் இராசராச வேந்தனாய் —நல்லோன்

78. ஒருவன் பிறந்தால் உயர்தமிழ் வாழும்
அருமை பெருமை அமைந்த — திருவுடையீர்

79. இம்மூவர் போய்ப்பிறப்பார் எந்தமிழ் நாட்டினில்
செம்மைசால் ஒருருவில் சீருறுவர் —நம்மை

80. வணங்குவான் மூவர்தம் வாழ்வுடைய மைந்தன்
இணங்கி நடப்பான் எழில்நற் — குணங்கொள்வான்

81. என்றலும் அன்னைசொல் ஏற்றனர் மூவருமே;
நன்றிது தாயே நலமுறச் —சென்றங்கே

## திருவாரூரின் சிறப்பு

82. எங்குபோய்த் தோன்றுவோம் என்றனர்
சொல்லுவேன்
எங்கெங்கும் காணின் எழில்கொழிக்கும்
—திங்களைப்

---

75. 1. விதிவகை என்றெண்ணி வெந்து கிடப்பார் செந்தமிழர்.

76. மூவர் — கம்பன், இளங்கோ, இராசராசன்.

77. 2. வில்லார் — வில்லாற்றல் உடைய

83. போய்மறைக்கும் மேகத்தைப் போய்மறைக்கும்
நெற்கதிர்கள்
சாய்ந்து நடனச் சதிராடும் —தோய்ந்திருக்கும்

84. விண்ணணைச் சிலமரங்கள் வேதப் பொருளுரைத்துக்
கண்ணுக் கினியதோர் காட்சிதரும் —எண்ண

85. இயலாப் பசும்புல் எழிலுடலைத் தொட்டுப்
பயன்வளர் தென்றல் பனிபோல் —அயல்வீசி

86. ஏழிசை இன்பம் எதிர்வந்து தந்திடும்
வாழியெனப் பண்பாடும் வண்டுகள் —சூழும்

87. மலர்க்காட்டில் தூங்கும் வயல்கள் வழியில்
நலம்பாடும் நற்கிளிகள் நாளும் - வலம்வரு

88. தேரொலியால் கோயிற் சிவனின் மணியொளியால்
**பாருக்குக் கண்ணாகும் பண்புத் —திருவாரூர்ப்**

## திருக்குவளையின் சிறப்பு

89. பக்கத்தே **சீர்விளங்கு பார்மகளின் கண்மணி**
**ஒக்கும் திருக்குவளை உண்டறிவீர்** — அக்கால்

90. நிழலாடும் மேகம் நிமிர்ந்தாடும் ஆலும்
கிழக்கினில் விண்ணிலவும் கெஞ்சித்
—தொழுதிருக்கும்

91. கண்சிமிட்டிக் கொஞ்சும் கவின்கண்ட
விண்மீன்கள்
பெண்ணழகு பாடும் பெருங்குயில் - கண்போல்

---

88. 1. கோயிற் **சிவன்** — திருவாரூர்த் தியாகராசப் பெருமான்.

92. மலரும் கருநெய்தல் வந்துதவழ் முல்லை
நலமுறப் பாடும் கிளிகள் —மலர்ந்தே

93. அசைகின்ற தாமரை ஆடும் மயில்கள்
திசையெங்கும் சீரோங்கு தென்னை — இசைமேவு

94. பூவாடை போர்த்த புனலோடை வம்மினெனப்
பூவசைத்துக் காற்றிலாடும் பூங்கொடிகள்
- பாவளர்த்த

95. மைந்தர்காள் போய்ப்பிறப்பீர் மாண்புடன்
ஆங்கென்றாள்
ஐந்திணையும் கற்றோர் அகமகிழ்ந்தார்
— பைந்தமிழைக்

96. குன்றத்தின் மேலிட்ட கூர்விளக்காய் ஆக்கிடச்
சென்றோர் பிறந்தார் திருக்குவளை —நன்றாவாள்

## கலைஞரின் பிறப்பு

97. முத்தமிழ்த் தாயவட்கு மூண்ட பெருவிருப்பால்
**முத்துவேலர் அஞ்சுகத்தின் முத்தெனவே**
—இத்தரையில்

98. மூவர் ஒருவனாகி முத்தமிழ்க் காவலனாய்
நாவலனாய்ச் சொல்லாரும் நாற்றிசைக்கோர்
- பாவலனாய்க்

99. கண்ணுலகில் தோன்றிக் **கருணா நிதியெனப்**
**பண்ணாரும் பேர்பெற்றார் பண்பினால் —கண்போலும்**

---

96. 1. கூர்விளக்காய் — மிக்க ஒளியுடைய விளக்காய்.

99. 2. பண்ணாரும் — இசையினும் இனிய

## கலைஞரின் சிறப்பியல்புகள்

100. செந்தமிழில் வல்லவன் சீர்சால் கலைஞனவன்
வந்தோர்க்கு வாழ்வளிக்கும் **வள்ளலே**-வெந்திங்கே

101. நொந்தனர் ஏழையர் நோய்தீர் மருந்தவன்
இந்நாள் **எழுத்துலக ஏந்தலே**–செந்தமிழ்ப்

102. பாட்டுக்கோர் பாவலன் பாட்டுக்குள் வாழ்பவன்
நாட்டின் நலங்கருதும் **நாவலனே**-நாட்டின்

103. அறியாமை போக்கும் அறிவுலகச் செம்மல்
வறுமை அழிக்கின்ற **மன்னன்**–செறிந்த

104. உறவுக்குக் கைகொடுக்கும் ஒப்பற்றோன் நாட்டின்
செறியுரிமை கேட்கின்ற **சிங்கம்**—மறவாமல்

105. தன்னாட்சி கேட்கும் தமிழ்வீரன் செந்தமிழால்
பொன்னாட்சி காணும் **புலவனே**-என்றுமெங்கும்

106. ஏழைச் சிரிப்பில் இறைவனைக் காண்பவன்
ஆழிசூழ் பாருக்(கு) **அறிஞனே**-ஏழைகள்

107. வாழப் பெரிதுழைக்கும் வள்ளற் **பெரியோனே**
வீழுமோர் ஆலின் விழுதொப்போன்-தாழாத

108. வீரத்தில் என்றுமவன் **வேங்கையே** எக்காலும்
மாரி கொடைக்கென்பர் மாநிலத்தில்-**காரியோரி**

---

104. உறவுக்குக் கைகொடுப்போம்; உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற கொள்கை.

105. தன்னாட்சி=மாநில சுயாட்சி.

107. 2. ஆலின் விழுதுபோல் அனைவரையும் தாங்கும் பண்பு நலன்.

108. 109. காரியோரிபாரி=மலையமான் திருமுடிக் காரியும் வல்வில் ஓரியும் முல்லைக்குத் தேரீந்த பாரியும்.

109. பாரியும் ஒப்பாகாப் பாரின் கொடைவள்ளல்
பேருலகில் கல்விப் பெரியோனே—ஆருடன்

110. வேம்பும் பனையினை வேய்ந்தோரும் ஒப்பாகார்
நாம்விரும்பும் நானிலத்து நல்லரசன் தேம்பொதி

111. சொற்பெண்கள் கல்விநலத் தூய்மை விரும்பு
கின்ற
பொற்காலம் காணும் புகழினேன்—நற்றமிழே

112. பாடத்தை நாட்டில் பயிற்றுமொழி என்றுரைத்த
நாடவரும் எல்லோர்க்கும் நற்கலைஞன்—பாடிவரும்

113. பைந்தமிழ்க் காவலன் பண்பின் உறைவிடம்
ஐந்திணையும் கற்ற அருந்தெய்வம்—பைந்தமிழை

114. மூச்செனவே கொண்ட முதலமைச்சன் சீர்சான்ற
பேச்சில் தமிழ்மணக்கும் பேரறிஞன்—பேச்சினில்

---

109. 2. ஆர் — ஆத்திமாலை — சூடியவன் சோழன்.

110. 1. வேம்பு — வேப்பம் பூமாலை — சூடியவன் பாண்டியன்.

110. 1. பனை : பனம் பூமாலை — சூடியவன் சேரன்.

110. 2. தேம் பொதி : தேன் பொதிந்த

111. 1. பெண்கள் கல்வியுடனும் தூய்மையுடனும் வாழ வேண்டும் என விரும்புதல்.

113. 2. ஐந்திணை : முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை ஒழுக்கங்கள்.

115. ஏழையர் முன்னேற்றம் எக்காலும் கொண்டவன்
ஆழும் **பகுத்தறி (வு) அண்ணலே**—சூழுமோர்

116. உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளனென்ற—வள்ளு
வத்தின்

117. காட்டாய் விளங்கும் **கலைஞன்** புவியனைத்தும்
பாட்டாலே ஈர்க்கின்ற **பாவல்லோன்**—நாட்டினில்

118. **செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் என்கின்றார்**
**வல்லவன் பேச்சினை வாழ்த்தினரோ—நல்லார்**

119. **அருட்செல்வம் செல்வத்துட் செல்வமே என்பார்**
**அருளாளன் வாழ்த்தி அமைத்தோ—பெரியர்**

120. **செயற்கரிய செய்வாரே என்றுரைத்தார் சீர்சால்**
**செயலோன் திறமை அனைத்தும்—வியந்தன்றோ**

121. **வாய்மை எனப்படுவதி யாதெனின் யாதொன்றும்**
**தீமை இலாத சொலலென்றல்—தூய்மை**

122. **இவன்கண்டு சீராய் இயற்றினரோ** என்றும்
உவப்பவே கூடும் **உயர்வோன்**—கவலாமல்

123. இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலனென்றும்—என்று
மெங்கும்

124. இன்பம் விழையான் வினைவிழைவான் தன்
கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூணென்றும்—
நன்றுரைத்தார்

125. வள்ளுவர், எம்தலைவன் வாழ்க்கை வியந்தன்றோ
உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளும்
—வள்ளலன்றோ

126. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்னிதனை—ஏற்றவன்

127. **காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனவன்
மாட்சி யுடையவன் மாநிலத்(து)—ஆட்சியில்**

128. **இன்சொலால் ஈத்தளிக்க வல்லான் வறியவர்க்(கு)
ஒன்றீதல் ஈகையெனும் ஓர்கொள்கை—நன்குடையன்**

129. **தன்னாட்சி காணும் தனிவிருப்பால் வாழ்கின்றான்
பொன்போலக் காப்பீர் புலவர்காள்**—மன்னிய

130. செந்தமிழ்க்கோர் காவலன் செஞ்சொல்லின்
கொண்டலவன்
எந்நாளும் காதலன் ஏழிசைக்கே—இந்தித்

131. திணிப்பை எதிர்க்கின்ற **செந்தமிழ்க் கோமான்**
பிணியென வாழ்கின்ற பிச்சைப்—பணியார்

132. மறுவாழ்வுத் திட்டத்தின் **மன்னன்** தமிழர்
உறுதுயரைப் போக்கும் உயர்ந்தோன்
—பொறுமைக்கு

---

128. ஈகையெனும் - ஐகாரக் குறுக்கம்

129. மன்னிய - நிலைபெற்ற

132. 2. உறுதுயர் - மிக்கதுன்பம்.

133 மண்போன்றான் நல்வலிக்கு வாழ்காற்றுப்
போன்றவன்
விண்போன்றான் நல்லறிவில் வேந்தனே—கண்
போன்றான்

134. காட்டும் நிதியாம் கருணைக்கு நீராவான்
வாட்டும் தெறலில் வளர்நெருப்போன்—**கூட்டும்**

135. **அணிதேர்ப் புரவியும் ஆட்படையும் இன்றித்**
**துணிவொன்றால் வெல்கின்ற தூயோன்**—பணிவுடைய

136. தோழர்க் குயிர்கொடுப்பான் தூய்மைக்(கு)
உடலளிப்பான்
ஏழைக்(கு) உளங்கொடுத்த **ஏந்தலே**—வாழவோர்

137. நல்லது செய்தலை ஆற்றீர் எனினுமோர்
அல்லது செய்தலை ஓம்புகென்(று)—எல்லோர்க்கும்

---

133. பொறுமைக்கு மண் போன்றவன்; வலிமைக்குக் காற்றினைப் போன்றவன்; நல்லறிவுக்குப் பரப்புடைய விண் போன்றவன்; வேந்தனாகிய கருணாநிதி நாட்டுக்குக் கண் போன்றவன்.

134. உலகின் செல்வமாகிய கருணைக்கு நீர் போன்றவன்; குற்றம் செய்தார்க்குத் தண்டனை கொடுப்பதில் நெருப்பாவான்.

தெறல் - குற்றம் அழித்தல்.

135. தேர் - தேர்ப்படை

புரவி - குதிரைப்படை
ஆட்படை - காலாட்படை

137. 1. அல்லது – தீமை

138. சொல்லித் திருத்துகின்ற தூய்மைவாழ்
கொள்கையன்
எல்லாமும் எல்லார்க்கும் என்பவன்—**வெல்லாரும்**

139. **நாட்டினைக் காக்கவே நாலிரண்டு கோடிதந்து**
**நாட்டின் நலம்விரும்பும் நல்லறிஞன்**—பாட்டாளி

140. மக்கள் உயர்வை மனதார எண்ணிடும்
தக்கோன் **சிறந்த தமிழனவன்—எக்காலும்**

141. **கல்விக்கும் கேள்விக்கும் கண்ணும் கலைகட்கும்**
**எல்லாரும் நன்கிவனை ஏத்துகின்றார்—சொல்லார்**

142. **புலவரெலாம் பாடும் புகழுடையோன் சீர்சால்**
**புலமைத் தலைமைப் புலவன்**—நிலவுலகில்

143. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழியெனக்—கற்று

144. வறியவர்க் கெல்லாம் மனைநிலம் தந்தோன்
சிறியன 'சிந்தியாச் செம்மல்—நெறியுடன்

145. வாழ்பவன் செந்தமிழ் மாநிலத் தோர்தலைவன்
மூழ்குவான் ஆழியெனும் முத்தமிழுள்—
வாழ்வோனைக்

---

139. 1. நாலிரண்டு - நாலும் இரண்டுமாகிய ஆறு.

143. 1. அற்றார் - ஒரு பொருளும் அற்ற ஏழையர்.
அழிபசி - மிக்க பசி

144. 1. மனைநிலம் – வீடும், நிலமும்.

145. 2. ஆழி - கடல்.

## தலைவியின் காதல்

146. காதலித் தென்மறந்தேன் கண்போலும் தோழியே!
தூதாகிச் சென்றுவா தூயனிடம்—காதினில்

147. ஏறுமாறு சொல்லுவாய் என்காதல் என்துயரைக்
கூறி அழைத்துவா கொற்றவனை—ஆறு

148. பெருக்கெடுத் தோடல்போல் அன்போடும் நெஞ்சில்
உருவோடு நிற்பான் உயர்ந்தோன்—திருவளர்

149. கண்திறந்தால் நீங்குவான் காவலன் என்றெண்ணிக்
கண்மூடி வாழ்கின்றேன் காவளர்—பண்கிளியே

150. அன்னவனை நான்காண அன்போ டழைத்துவா
மன்னவன் வந்தால் மகிழ்ந்திருப்பேன்— இன்றேல்

151. அவனணிந்த மாலையை ஐயமின்றி வாங்கித்
துவளுமுன் வாராய் தொடர்ந்து—கவலாதே

## தோழியைத் தூதனுப்பும் காரணம்

152. அன்னத்தைத் தூதாய் அனுப்புவேன் அன்னந் தான்
இன்றில்லை என்பரே என்செய்வேன்—தென்றலைச்

153. சென்றுவா தூதென்பேன் தென்றலும்
**என்னருமை**
**மன்னன் எழுத்தில் மயங்குமே**—பின்னோர்

154. கருங்குயிலைப் போவென்பேன் கார்க்குயிலும்
**காதல்**
**திருநாவின் செந்தமிழைச் சிந்தித்(து)—உருகுமே**

155. செந்தமிழைத் தூதாகச் செல்லென்பேன்
**செந்தமிழும**
**சொந்தமென மார்பினில் தூங்குமே**—நொந்தோர்

156. மயிலைச்செல் லென்பேன் மயிலுமவன் **பாட்டில்**
**மயலாகி ஆடும் மகிழ்ந்து**—செயலற்றேன்

157. பூவொன்றைக் கையேந்திப் போவென்பேன்
**மாலையாய்ப்**
**பூவுமவன் மார்பினைப் புல்லுமென—நோவேன்**

158. வளைகளைத் தூதாய்ச்செல் வள்ளலிடம் என்பேன்
இளைத்தேன் வளைகள் இழந்து—களைத்தேனே

159. எவ்வகையில் உய்வேனோ இவ்வுலகில் என்
றெண்ணி
எவ்வகையும் காணமல் ஏங்கினேன்—
இவ்வகையே

---

157. 2. புல்லும் - தழுவும்.
நோவேன் – வருந்துவேன்.

158. வளைகளைத் தூதாகச் செல் வள்ளலிடம் என்று கூறலாம். ஆனால் தலைவனை எண்ணி உடல் இளைத்ததனல் நான் வளைகளை எப்பொழுதோ இழந்து விட்டேன். அவை இருக்கும் இடமும் நினைவினில் இல்லை. என் செய்வேன்?

160. நன்றென்று தோழியே நானுன்னைச்
செல்கென்பேன்
என்மேல் சினமின்றி ஏகுவாய்—அன்புடனே

## கருணாநிதி முக்கனி

161. சீராரும் சொற்பொழிவு தேன்தோய் பலாவாகும்
மாரன் மயங்கிடும் மன்னவன் - பேரார்

162. கருத்துரைக்கும் நல்லெழுத்தோ கண்டினிக்கும்
மாவாம்
வருமோர் கவிதைகள் வாழை—**திருவாழ்**

163. **கருணா நிதிமுக் கனியாவான்** பாரில்
பெருமையுடைய பெரியோன்—திருவுலகில்

164. **பாவேந்தன் நல்லதோர் பார்வேந்தன் கோவேந்தன்**
**நாவேந்தன் என்றுரைப்பார் நல்லோர்கள்** — பூவேந்து

---

161. 162. தேன் தோய்த்த பலாப்போலினிக்கும் சொற்பொழிவுடையான்; மாரனாகிய மன்மதனே மயங்கும் அளவுக்குக் கருத்தாழம் உடைய எழுத்தோ இனிக்கும் மாம்பழம் ஆகும்; கடல்மடை திறந்ததுபோல் உள்ளத்து இருந்து வருகின்ற கவிதைகளோ வாழையாகும்.

161. 2. மாரன் - மன்மதன்.

162. 1. கண்டு என்பதனைக் கற்கண்டு எனினும் ஒக்கும்.

102894

## கருணாநிதி பிரமன்

165. தாரணிந்தோன் நான்கு தலையன் பிரமனை
நேரொப்பான் நான்விரும்பும் நீதியோன்—
காராரும்

166. எள்விழுந்தால் எண்ணெயாகும் கூட்டத்தில்
ஏறிநின்று
துள்ளுகின்ற பேச்சைத் தொடங்கியே—
உள்ளார்

167. அனைவரையும் நாற்புறமும் அன்றுடம் நோக்கும்
வினையால் பிரமனான் வேந்தன்—நினைவினால்

## கருணாநிதி திருமால்

168. தேர்தல்வாழ் காலத்தில் செந்தமிழ் நாடுசுற்றி
**வார்மண் அடியளந்த மாலானான்**—பேர்வாழ்

## கருணாநிதி சிவன்

169. இருபதாண் டேறிய கட்சியின் ஆட்சிச்
செருவழித்துச் சீர்வாழ் **சிவனாய்** —உருக்கொண்
டான்

## தலைவியின் காதல் நினைவு

170. எக்காலும் என்நினைவில் ஏந்தல்தான் வந்திடு
வான்
அக்கெனுமுன் இன்றேல்நான் கந்தல்தான்
—முக்காலம்

---

**170. 2. அக்கெனுமுன் – 'அக்' என்று ஒலிக்கும் முன்.**
**" " கந்தல்தான் – ஒன்றுக்கும் பயனாகாக் கந்தல் போல் நானும் இறப்பேன்.**

O-18NNP2,T
N72

171. கண்டோரும் வாழ்த்துகின்றுர் முத்தமிழ் வள்ள
லென்றே
தொண்டுள்ளம் கொண்டோருள் தூயவனை—
மண்டுமோர்

172. ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்கின்ற ஏந்தலவன்—தீயர்

173. திருந்த வழிவகுக்கும் செம்மலோன் நோய்தீர்
மருந்தென வாழ்கின்ற வள்ளற் — பெரியவன்

174. அன்னவனைப் போய்க்காண் அருந்தோழி என்
நிலைமை
மன்னவற்குச் சொல்வாய் மறக்காமல்
— என் துயரைக்

175. கண்டவள் நீயன்றே காமநோய் தீர்க்கவே
கண்போல் விரைந்தேகு காவலன்பால்—பெண்
காதல்

171. பேசிவருந் தூது பிறிதுண்டோ நீயின்றிக்
காசினியில் துன்புற்றேன் கண்மணியே
—கூசாதே

177. மாசறு பொன்னே வலம்புரி முத்தென்பேன்
காசறு நல்விரையே கன்னலே—பேசுதேனே

178. ஆருயிர் நன்மருந்தே ஆற்றல்சால் பாவையே
ஓருயிர் நாமன்றே ஓர்தோழி—நேரும்

---

176. 2. காசினி - உலகம்,

179. மலையிடைத் தோன்று மணியாவான் சாரும்
அலையிடைத் தோன்று அமிழ்தோன்—**கலைஞன்**

180. **அவனொருவன் இன்றேல் அருந்தமிழின் றில்லை**
உவகையால் செல்லுவாய் ஓர்ந்து—கவலு
கிறேன்

## ஏங்குகிருள் தலைவி

181. தீங்கட் கரும்பெனும் செந்தமிழன் தோளினில்
தூங்குவ தெந்நாளோ தோகையே—ஏங்கு
கிறேன்

182. நீரார் கடல்சூழ் நிலமடந்தைக் கண்ணனைப்
பாரறியக் கூடுவனோ பண்பினளே—சீராரும்

183. என்னைப் புணர்ந்தெனக் கின்பவகை நல்கியவன்
பொன்னெனச் சொல்வானோ பூவையே—
என்னுடலை

184. மன்னவன்கை தீண்டுமோ மங்கையே சொல்லு
வாய்
பொன்னிற் புனைந்ததோர் பூங்கொடியே—
என்னை

185. அவன்தீண்டும் பொன்னாளே அன்புத் திருநாள்
சுவையாரும் கைகளுக்குள் தூங்கி
—உவப்பேனோ

---

181. 1. தீங்கட்கரும்பு - இனிமையாகிய கணுக்களை யுடைய கரும்பு.

182. 1. கண்ணனை - கண்மோன்றவனை.

183. 2. பொன்னெனை - பொன்னே என.

186. என்னைப் புணரா திருக்குநாள் ஒவ்வொன்றும்
பொன்னுடையாய் வீணளாய்ப் போகுமே
—என்செய்வேன்

187. கண்ணிரண்டாற் காண்பான் கவினுடலைக்
கையிரண்டாற்
பெண்ணென்னை அள்ளுவான் பேருடையான்—
எண்ணாத

188. எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏங்கு
கிறேன் நான்வீணை
பண்வாழ் விரலாவான் பாவையே — கண்ணார்

189. மலராவேன் வந்துண்ணும் வண்டாவான்
நானோர்
நிலவாய் ஒளியாவான் நின்று—பலர்புகழும்

190. என்தலைவன் பொன்னுடலை ஏற்றணைக்கும்
பொன்னாளே
என்றுவரும் தோழி இயம்புவாய் —சென்றவற்குச்

191. சொல்லுவாய் என்னுயிர்த் தோழி **உலகினில்
நல்லோர்க்கும் நல்லோனை நாடுவேன்**- செல்லுகின்ற

---

186. 2. பொன்னுடையாய் - பொன்னணிகள் அணிந்தவளே!

188. நான் வீணையாவேன்; அவன் நரம்பினை மீட்டும் விரலாவான்.

189. 1. நான் மலராவேன்; அவன் வண்டாவான் எனக்கு.

189. 2. நான் நிலவாவேன்; அவன் ஒளியாவான் எனக்கு.

192. **கொள்கைக்காத் தன்தலையைக் கூரிருப்புப் பாதையில்**
**துள்ளிவந்து வைத்தவன்** தோழியே — நள்ளிருளில்

## கனவில் கருணாநிதி

193. நேற்றிங்கே வந்தென்னை நெஞ்சாரக் கூடினான்
ஊற்றினைப்போல் இன்பம் உவந்தளித்தான்
—ஏற்ற

194. மலர்பரப்பி மஞ்சத்தில் வந்தமர்ந்த வேளை
நலமுடன் வந்தென்னை நைந்தோய்—கலங்காதே

195. என்றுரைத்(து) என்கையால் தன்கண்ணை
ஒற்றினேன்
தன்கையென் நெற்றி தடவியே—இன்புற்(று)

196. எனைநிமிர்த்தி முத்தமிட்டான் ஏழுகோடி
மேலாய் அனைத்திடமும் கண்டென்னை அன்பன்
—நனைத்தனன்

197. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறியநீர் என்றான் —நிலவுலகில்

---

192. **டால்மியாபுரம் என்னும் பெயரைக் கல்லக்குடி என மாற்றவேண்டும் என்னும் புரட்சியின்போது, அண்ணாவின் தளபதியாய்ச் சென்று, டால்மியாபுரம் என அன்று பெயருடைய கல்லக்குடிப் புகைவண்டி நிலைய இருப்புப் பாதையில் சுடுவோர்க்கும் புகைவண்டிக்கும் அஞ்சாமல் தோழர்கள் அனைவரும் பின்னாகத் தான்முன்னாகத் தலை வைத்துப் படுத்த நிலைமை.**

198. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புல
னும்
ஒண்டொடி கண்ணே யுளவென்றான்—
கண்டென்னைக்

199. காற்றென வந்தணைத்துக் காவியம் செய்தனன்
காற்றிடைப் போகா முயக்கென்று—சாற்றி

200. முயங்கி மயக்கி முடிவிலா இன்பம்
தயங்கா தளித்தான் தமிழன்—மயங்கியே

201. கட்டிலில் வீழ்ந்தேனைக் காதற் கனியாக்கிக்
கட்டழகு கண்டு களித்தனன்—தொட்ட

202. இரவெல்லாம் செய்தகதை எப்படிச் சொல்வேன்
விரலெல்லாம் நண்டாகி வேண்டும் — இரவெல்
லாம்

203. என்னுடலில் மெல்லமெல்ல ஏறி நடந்தனவே
மென்கூந்தல் மீன்பிடித்தான் மேலானேன்
— பொன்மகளே

204. காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்றுரைத்தான்—
நாணியே

205. கண்புதைத்தேன் தாமரையில் காரார் இருகுவளை
நண்ணி மலர்வதுண்டோ நங்கையே—பண்ணார்

---

205. 206. நாணியே கையால் கண்புதைத்தேன். தாமரை போன்ற முகத்தில் குவளைகள் இரண்டும் மலர்ந்தனவே என்றுரைத்தான். முகமறைத்த கைகளை இரு காந்தள் என்றான். தாமரையில் மலர்ந்த இருகுவளையை இரு காந்தள் மறைத்தன என்பது கற்பனை.

206. இருகாந்தள் ஓடி இருகுவளைப் பூவின்
உருமறைக்கும் விந்தை உரைப்பாய்
—திருவுடையாய்

207. என்றுரைத்தான் நானும் எனைமறந்து வீழ்ந்ததும்
தின்றான் கனியிதழைத் தின்றேனே—நின்ற

208. இரவிடைக் கண்விழித்தேன் ஏந்தலைக் காணேன்
இரவு கனவாக ஏங்கி—உருகினேன்

## தோழியே! நல்வழி செல்வாய்

209. பொன்மகளே என்னுரையைப் பொய்யிலாச்
செம்மலிடம்
நன்றுரைப்பாய் நானோர் நலம்பெறவே
—சென்றடையும்

210. எவ்வழியும் ஏகாதே இங்குனக்குச் சொல்லுவேன்
செவ்வழியில் சீர்பயக்கச் செல்கவே—எவ்வழியும்

211. நல்வழிதான் என்றாலும் நானுனக்கு நல்லதோர்
செல்வழி கூறுவேன் செம்மையாய்ச்—சொல்லும்

212. வினையும் தொடர்பிலா வீணரை என்றும்
கனவினும் காண்டல் கொடிதே—தினையளவும்

213. அன்னோரின் கண்படாமல் ஆற்றலுடன்
செல்கவே
நன்றி மறவாத நங்கையே—என்றும்

---

211, 212. சொல்வது ஒன்று; செய்வது வேறு ஒன்று—இவ்வாறு திரியும் வீணர்கள்.

214. தமிழினுல் வாழ்ந்து தமிழைப் பழிப்பார்
உமிழ்வாய் அவர் முகத்தில் ஓங்கித்
—தமிழ்நாட்டில்

215. தன்னுட்சி வீணெனும் தான்தோன்றிக் கூட்டத்தார்
இன்றுள்ள வீதியில் ஏகாதே—நன்றும்

216. குணமறந்து வாழ்வினில் குற்றமே காணும்
பிணம்போல்வார்க் கண்டாலும் பேசேல்
—பணத்தைப்

217. பொருளென் றறநெறி பொய்யென்பார் வீட்டில்
பருகாதே தண்ணீரும் பாவாய்—கருமைத்

218. திருவோடு தூக்கித் தெருவோடு போகும்
திருநீங்கு பிச்சைச் சிறியார் — தெருவாழ்வை

219. நன்ருக்கிக் காட்டும் நலமிகு திட்டத்தைத்
தின்று கொழுத்தவர் திட்டுவார்—என்றும்

220. அவர்வீட்டு முன்றில் அழைத்தாலும் போகேல்
கவருகின்ற கட்டழகில் காதல்—தவழ்கின்ற

---

216. குணங்கண்டாலும் அதை மறந்து குற்றமே காண்பவர் பிணத்தைப் போன்றவர்கள்.

217. 1. பொருள் - உண்மை.

218. 2. திரு நீங்க - செல்வமில்லாத.

218. 2. தெருவாழ்வு - வானமே கூரையாக வையகமே வீடாக வாழும் இழிநிலைமை.

220. 1. முன்றில் - முற்றத்தில்.

,, ,, போகேல் - போகாதே.

221. என்னுள்ளம் காட்டி இயம்பிய சொல்லோர்வாய்
என்னுயிர் ஒன்றிய ஏந்திழையே — **இன்னமும்**

222. **சேலம் இரும்பாலைத் திட்டம் எதிர்க்கின்ற**
**ஞாலங் கெடுக்கும் நரியன்னோர்** — பாலைக்

223. கொடுக்கினும் தோழி குடிக்காமல் போவாய்
எடுக்கக் குறையாத இன்பம்—கொடுப்பேன்

---

**221. 1. சொல்லோர்வாய்–என் சொற்கருத்தை எண்ணுவாய்.**

**221. 2. என்னுயிர் ஒன்றிய ஏந்திழை - உள்ளத்தால் மட்டுமின்றி உயிராலும் என்னுடன் ஒன்றியுள்ள ஏந்திழையாகிய தோழியே.**

**ஏந்திழை – பெண்.**

**தலைவிக்கும் தோழிக்கும் உயிரும் உடலும் உள்ளமும் ஒன்றாகவே கருதப்பெறும் என்பது அகத்திணை நூல் வல்லார் கருத்து.**

**222. 1. சேலம் இரும்பாலைத்திட்டம் – பல்லாண்டுகாலப் போராட்டத்தின் பின்னர், இத்திட்டம் நம் ஆட்சியில் செயல்படத் தொடங்கியுள்ளது. இத்திட்டத்தைக் கெடுக்க வேண்டும் என நினைத்து உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசித் திரியும் வீணர்களை "ஞாலம் கெடுக்கும் நரியன்னோர்" என இத்தோழிவிடு தூது குறிப்பிடுகிறது.**

**222. 2. நரியன்னோர் – தமிழகத்தில் ஒன்றும் வடவர் நாட்டில் வேறொன்றுமாகப் பேசித் திரிந்து பதவிக்குப் பல்லிளிக்கும் சூழ்ச்சியாளர்.**

**223. 1. கொடுக்கினும் – கொடுக்கமாட்டார்கள்; அப்படியே கொடுத்தாலும்;**

## எண்ணமெலாம் என்தலைவன்

224. கணவனுவான் இங்கெனக்குக் கண்ணவனே
ஆவான்
மணக்கத் துடித்து மயங்கிப்—பிணமாக

225. வாழ்கிறேன் நாளெலாம் வாடிக் கிடக்கின்றேன்
வீழ்பனித் தாமரையாய் வீவேனே—
வாழ்ந்திடவே

226. உண்ணும் உணவில் உடுக்கும் உடையினில்
தண்ணீரில் காண்பேன் தலைவனை—எண்ணியே

---

223. 1. குறையாத இன்பம் - துய்க்கத் துய்க்கப் பழமை மாறிப் பேரன்பு ஒன்றிய நிலைமையால் என்றும் புதுமை யாகவே தோன்றும் இன்ப வாழ்வு.

224. 1. என் உயிருக்கும் உடலுக்கும் உள்ளத்துக்கும் அவனே கணவனுவான். ஆனுல், எனக்கோ அவன்தான் கண்ணுக இருக்கின்றுன். இவ்வாறு தன்னையும் தன்னுடலையும் பிரித்து பேசலைச் சங்க இலக்கியவல்லார்வாய்க் கேட்டுணர்க.

224. 2. திருமண வேட்கை எல்லை கடந்தமையால் துடித் தேன்; துடிப்பாலும் அவன் கிடைக்காத காரணத்தால் மயங்கினேன்; மயங்கி நடைப்பிணமாக வாழ்ந்துகொண் டிருக்கிறேன்.

225. 2. வீழ்பனித்தாமரை - பனி வீழ்ந்த தாமரை.
வீவேனே - அழிவேனே.

226. 228. நோக்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந் துள்ளான் என் தலைவன். எல்லாமும் என் தலைவனுகவே எனக்குத் தோன்றுகின்றன. இனி, அவனின்றி நான் உயிர் வாழ்தல் இயலாது என்பது உட்பொருள்.

கன்னல் - கரும்பு.

227. தின்னுகின்ற வெற்றிலையில் தீஞ்சுவை
நற்கனியில்
கன்னலில் கற்கண்டில் கண்டிடும்
—பொன்னணியில்

228. எண்ணத்தில் எல்லாமும் என்தலைவன்
தோன்றுவான்
கண்ணிற் கினியானைக் காசினி—கண்டவனைச்

229. செந்தமிழ் வல்லவனைச் சீர்மிகு செம்மலைச்
சிந்தனைச் சிற்பியைச் சீர்பெற—வந்தவனைக்

230. கேட்டார்ப் பிணிக்கின்ற கேள்வியுடைச் சொல்லவனை
நாட்டோர் விரும்பிட நாடினேன்—கேட்பான்

---

காசினி கண்டவனை - உலகெலாம் சென்று கண்டு உணர்ந்தவனை.

229. 1. செம்மல் - ஆண்மக்களுள் பெருஞ் சிறப்பினைப் பெற்றவனைச் செம்மல் என்பது செந்தமிழ் வழக்கு.

229. 2. சிந்தனைச் சிற்பி - எந்நாளும் ஏழையர் வாழ்வின் உயர்வையே சிந்திக்கின்ற காரணத்தால் சிந்தனைச் சிற்பி எனப்பட்டான். சாமானியர்களைப்பற்றிச் சிந்திக்கும் சாமானியன் எங்கள் தலைவன்.

230. "கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

என்ற திருக்குறளுக்கு இலக்கியமாகச் சொற்பொழிவாற்றும் திறனுடையான்.

## வீட்டில் காண்பாய் தலைவனை

231. குறைகள் முறைசெய்வான் கோவேந்தன்
எண்ணி
நிறைந்திருப்போர் தேனீயாய் நிற்பார்
—உறையும்

232. பணக்காரர் வந்திருப்பார் பஞ்சாடை இல்லாக்
குணமுடைய ஏழையர் கூட—வணங்குவான்

## ஏழைகளின் தெய்வம்

233. **பாட்டாளி மக்கள் பசிதீர்க்க வந்தவனை**
வீட்டினில் காண்பாயே வீடுடன்—தோட்டமும்

234. இல்லாத ஏழையின் ஏற்றதோர் பக்கத்தில்
சொல்லாமல் நிற்பாய் துணிந்தங்கே
—செல்வர்கள்

---

231. 1. கோவேந்தன் - பேரரசன்.

,, 2. தேனீயாய் - தேனடை மொய்க்கின்ற தேனீக் களைப் போல.

232. பஞ்சாடை இல்லாத ஏழையராக இருந்தாலும் செல்வத்தினும் உயர்ந்த நற்குணமுடையவர்களைக் கண்டால் அவர்களை வணங்கும் தகுதியுடையவன் எங்கள் தலைவன்.

233. 235. டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, "பாட்டாளி மக்கள் பசி தீர்க்க வந்தவன்" என்றும், "திக் கற்ற ஏழையர்த் தெய்வம்" என்றும், 'தோழி விடுதூது' கூறிப் பெருமையுறுகிறது.

235. பக்கம் மறந்தேனும் பார்க்காதே நிற்காதே
திக்கற்ற ஏழையர்த் தெய்வமன்றே—அக்கால்

236. வறியவரை முன்னழைத்து வாழ்த்தி வணங்கி
அறிந்து குறைபோக்கும் அன்பன்—செறிந்த

237. **வறியார் மகிழ்வில் மனமகிழும் மாந்தன்**
**துறைதொறும் பேரறிவுத் தூயன்**—வறியவர்

238. ஆற்று(து) அழுகின்ற கண்ணீரே எக்காலும்
மாற்றும் அரசென வாழுமோர்—கூற்றினைக்

239. கண்டுணர்ந் தன்னோரின் கண்ணீரை மாற்றிட
மண்டி இருக்கும் வறியவரைக்—கண்டு

240. முகமுடன் கண்களும் முன்மலர வாழ்த்தும்
தகவுடையன் ஆதலினால் தாயே—அகமகிழ்வே

---

237. தான் கொண்ட துறைகளில் எல்லாம் செய்ய வேண்டிய சீர்திருத்தம் செய்து, தன் பேரறிவால் தூயனாகவே வாழ்கின்ற சான்றாண்மை.

238. 1. ஆற்றாது - பொறுக்க இயலாது.

,, 2. மாற்றும் - நீக்கும்.

வறியவரின் ஆற்றாது அழுத கண்ணீர்தான் அரசாட்சியை மாற்றுகிறது. இக்கருத்தை நன்குணர்ந்து ஏழை மக்களின் உயர்வுக்காகவே என்றும் வாழும் பேராண்மை.

239. 1. அன்னோரின் - வறியவரின்.

,, 2. மண்டி - எள் விழுந்தால் எண்ணெயாகும் அளவுக்கு நிறைந்து.

240. 2. தகவு - தகுதி.

241. ஏழையர் முன்னங்கே ஏழையே நின்றிடுவாய்
ஊழையும் உப்பக்கம் காண்கலைஞன்—ஏழையைக்

242. கண்டவுடன் வந்தங்கே காண வணங்குவான்
வண்டெனவே முன்போய் வணங்குவாய்
—கண்ணினிய

## தலைமுதல் காலவரை காண்

243. நேர்மையைக் காட்டுகின்ற நேர்வகிடும் பாருக்குள்
சீர்மிகுந்த செந்தமிழை எந்நாளும்—ஓர்தலையும்

244. பாரோர் மகிழும் பரந்ததோர் நெற்றியும்
பேரருளைப் பேசுகின்ற கண்களும்—சீராரும்

245. செந்தமிழை நாளெலாம் செம்மையாய்க் கேட்டுணர்ந்த
சிந்தனைச் செல்வத்துச் சீர்காதும்– செந்தமிழை

---

241. 1. ஏழையே - பெண்ணே.

241. 2. ஊழ் - முன் பிறவிகளில் செய்த நல்வினை, தீவினைகள்.

241. 1. உப்பக்கம் காண்டல்-தோற்கடித்து வெல்லுதல்

243. 2. ஓர்தலை - செந்தமிழை எந்நாளும் எண்ணிக் கொண்டே இருக்கும் தலை; ஒப்பற்ற தலையுமாம்.

244. 2. "கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம்"—இக் கருத்தே, "பேரருளைப் பேசுகின்ற கண்கள்" என இங்கே குறிப்பிடப்படுகிறது.

245. 2. "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்
அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

இத்திருக்குறளின் கருத்தமைத்துச் "சிந்தனைச் செல்வத்துச் சீர்காது" எனத் 'தோழி விடுதூது' குறிப்பிடுகிறது. காது, சிந்தனைச் செல்வத்துக்குரியது என்பதுணர்க.

246. மூச்செனவே கொண்டிருக்கும் மூககுடன் தன்ஞட்சி
பேச்சுரிமை பேசும் தமிழ்வாயும்—கீச்சென்று

247. கூவும் புகைவண்டி கூரிருப்புப் பாதையில்
கோவிலினும் நல்லதோர் கொள்கைக்காத்—தாவிவந்து

248. தன்தலையை வைக்கத் தயங்காத் திருக்கழுத்தும்
சென்ற இடமெல்லாம் சீர்பெற்றுப் —பொன்னினும்

249. மிக்கதோர் பூமாலை வேய்ந்த மலர்மார்பும்
இக்காசினி காணுதார் என்றுமே —அக்குருடர்

---

246. 1. தன்ஞட்சி பேச்சுரிமை - தன்ஞட்சியும் பேச்சுரிமையும்.

246. 2. 'கீச்'சென்று - "கீச்" என்னும் ஒலி.

247. 1. கூரிருப்பு - புகைவண்டி ஓடியோடிக் கூர்மையுற்ற இரும்பு.

இருப்பு—வலிக்கும் வழி வலித்தல் என்னும் திரிபிலக்கணம்.

247. 2. கோவிலினும் – தெய்வம் வாழும் கோவிலையும் விட.

நல்லதோர் கொள்கை - பாவியரால் டால்மியாபுரம் என அழைக்கப்பெற்ற கல்லக்குடிப் பெயர் மாற்றப் புரட்சிப் போராட்டம். அப்புரட்சியின் தளபதியாக இருந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதனை உலகமறியும்.

249. 1. பொன்மாலையைக் காட்டிலும் பூமாலை உயர்ந்தது. பூமாலையில் போடுகின்ற மக்களின் உள்ளன்பு உண்மையாய்க் கலந்திருக்கிறது. அதஞல், டாக்டர் கலைஞர் மு. கருணுநிதி 'தோழி விடுதூது' 'பொன்னினும் மிக்கதோர் பூமாலை' என இயம்புவது காண்க.

250. கண்ணொளி பெற்றிடவே கண்வழங்கு திட்டத்தைக்
கண்போலக் கொண்டுவந்த கைகளும் – பண்ணார்

251. திருத்தோளும் சீர்வயிறும் சேர்ந்த இடுப்பும்
திருவுலகில் எங்கெங்கும் சென்று - பெருகவே

252. சீர்திருத்தம் என்னும் சிறந்ததோர் கொள்கைக்காப்
பார்நடந்த கால்களும், பாவியரால் – சீர்கெட்ட

253. பாளையங் கோட்டையாம் பாழ்சிறையில் வாடிய
நாளைப் பெரிதெண்ணும் நல்லுடலும்—நாளெலாம்

---

249. 2. இவ்வுலகினை என்றுமே கண்டிராத குருடர் எனப் பொருளுரைக்க.

250. கண் வழங்கும் திட்டத்தைத் தம் கையால் கொண்டு வந்த டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களைத் தமிழ்நாட்டின் தனிப்பெருந் தெய்வம் எனினும் மிகையாகாது.

253. இந்தி எதிர்ப்புப் பெரும் புரட்சியின்போது (1965) பாதுகாப்புச் சட்டம் என்னும் பெயரால் சிறைப்படுத்தப் பெற்றுப் பாளையங்கோட்டையிலுள்ள பாழ்பட்ட தனிமைச் சிறையில் திங்கள் பல வைத்துக் கொடுமைக்குள்ளாக்கிய வரலாற்று நிகழ்ச்சி. கலைஞரின் வீரவாழ்வு, வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய சிறப்புடையது ஆகும்.

253. 2. பெரிதெண்ணும் உடல் – பாளையங்கோட்டைப் பாழ்சிறையில் வாடிய நாளையே தன் வாழ்வில் பெருமைக்குரிய நாள் எனக் கருதும் உடல்.

254. **கண்ணாரக் கண்டு களிமகிழ் வெய்துவாய்**
**கண்பெற்ற பேறு கடிதடைவாய்**—எண்ணத்தால்

ஏந்தலிடம் சொல்வாய்

255. என்னை மயக்கிய ஏந்தலிடம் சொல்லுவாய்
தன்னை அறிந்து தமிழோதிய—மன்னவனே

256. வள்ளலே வாழ்த்தி வணங்குவேன் என்நெஞ்சை
அள்ளினாய் பேச்சால் அரசனே—துள்ளும்

257. **திரைப்படத்துன் தீர உரையாடல் கேட்டேன்**
அரையானேன் காதலாகி ஆடல்
—உரைமறந்தேன்

258. **நாடகத்தில் நீநடித்தாய் நான்கண் டெனைமறந்தேன்**
வீடாக நெஞ்சளித்தேன் வேந்தற்கே—வாடாக்

259. கதைபடித்துத் தூங்கின் கனவினில் வந்து
கதைபடிப்பான் கண்ணாளன் கையால்—எதை
மறப்பேன்

---

254. 1· கண்ணாரக் காண்டல் - கண் நிறைவு பெறுகின்ற அளவுக்குக் கண்டு கண்டு மகிழ்தல்.

254. 2, கடிது - விரைந்து.

257. திரைப்படத்தில் உன் தீர உரையாடல் கேட்டேன் என்னை மறந்து உன்மேல் காதல்கொண்டு எக்காலும் உன்னையே எண்ணி உடலிளைத்துப் பாதி உடலானேன்; என் விளையாட்டையும் பேச்சையும் மறந்தேன்.

அரையானேன் - உடலிளைத்துப் பாதி உடலானேன்.
ஆடல் - விளையாட்டு.
உரை - வேடிக்கைப் பேச்சு,

260. **தேனூர் கவிதையின் தேவனை** ஏந்திழையே
நானோ விடுவது ஞாலத்தில்—கான

261. மகுடிக்கே ஆடி மயங்குபாம் பானேன்
நகுகின்ற வான்முகிலை நாடித்—திகழ்ந்தாடும்

262. நீல மயிலானேன் நெஞ்சம் இழந்திங்கு
நாலும் மறந்தேனே நங்கையே—**நாலும்**

---

260. 1. தேனூர் கவிதையின் **தேவன் - தேன் சொட்டும் கவிதைக்குத் தலைவன். உலகப் பெருங்கவிஞன் என்பது இத்தொடரின்கண் அமைந்துள்ள உட்பொருள்.**

260. 2. ஞாலம் - **உலகம்.**

262. 2. நாலும் மறந்தேன் - **பெண்ணுக்கு இயல்பான பண்புகளாகிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவைகளை மறந்துவிட்டேன்.**

252. 2. நாலும் - நாலடியார் **என்னும் புகழ் வாய்ந்த நூல்.**

263. 2. **இரண்டும் - திருக்குறள்.**

262. 263. **திருக்குறளையும் நாலடியாரையும் நன்கு பயின்றவன், சிறு பெண்ணாகிய என்னைக் காதலில் ஆழ்த்தி வாட்டுதல் முறைமையோ?**

**"ஆலும் வேலும் பல்லுக்குறுதி;**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி"**
**என்ற பழமொழியை எண்ணுக.**

263. 2. **திரண்டதோர் பெண் - இளமை வனப்பு மிக்கதோர் பெண்.**

263. **இரண்டும் படித்தவன் இப்படியோ செய்தல்?**
திரண்டதோர் பெண்ணென்னைத் தேய்ந்து
—கருகிய

• 264. என்புடலாய்ச் செய்தகலை எங்குகற்றாய்
என்றுகேள்
அன்பெண்ணி ஏங்குகிறேன் அத்தானே—
என்றுரைப்பாய்

• 265. காட்டாற்று வெள்ளம் கரைபுரண் டோடல்போல்
வாட்டிடும் காமத்தால் வாடுவேன்- மீட்கவே

266. வந்தாலோ நான்பிழைப்பேன் வாரான்
எனினிங்கே
வெந்து சிவலோகம் மேவுவேன்— சொந்தமாய்க்

267. கையில் வளைபறிக்கும் கைவித்தை
கற்றதெங்கே
மையிட்டோ என்னை மயக்கினாய்—**மையில்**

---

263. 1. என்புடல் - எலும்புடல்.

264. இளமை வனப்பு மிகுதியாக உள்ள ஒரு பெண்ணை எலும்புடலாக ஆக்கும் கலையை எங்கே கற்றாய்?

266. மேவுவேன் - போய்ச் சேர்வேன்.

267. 1. உடலிளைத்த காரணத்தால் தலைவியின் கைகளிலிருந்த வளைகள்தாமே வீழ்ந்தன. இச்செயலைத் தலைவன் செயலாக்கிக் "கையில் வளைபறிக்கும் கைவித்தை கற்றதெங்கே?" எனத் 'தோழி விடுதூது' கூறுகிறது.

267. 2. மையில் - குற்றமில்லாத.

268. **திருக்குறளைக் கற்றேன்** சிறுபெண்ணை வாட்டல்
பெருமையோ நீதியே பேசும்—**பெருமைத்**

269. **தமிழ்நூல்கள் கற்றுத் தரணியை ஆள்வோய்**
அமிழ்தாகும் பெண்ணென்னை ஆள்வாய்
—தமிழவேளே

270. உன்கருணை இங்கெனக்கும் உண்டோ
உரைப்பாயே
இன்ப உலகத்தில் ஏகலாம்—என்றுரைக்கும்

271. உன்சொல்லைக் கேட்டே உவப்பதும் எந்நாளோ
இன்சொல் மொழிவதும் எந்நாளோ—அன்பாரும்

272. கைகளுக்குள் கட்டுண்டு வாழ்வதும் எந்நாளோ
வைகலும் உள்ளத்தில் வைகுவோய்—வைகலும்

273. என்னருகில் நீஇருத்தல் எந்நாளோ கண்ணுக்குள்
நண்மணியாய் வாழ்கின்ற நல்லோனே
—பொன்னணியாய்

274. உன்மார்பில் நான்வீழ்ந்(து) உவப்பதும்
எந்நாளோ

**தென்னக வீராணத் திட்டத்து - மன்னவனே**

---

271. 1. **உவத்தல் - மகிழ்தல்.**

272. 2. **வைகலும் - ஒவ்வொருநாளும்.**

„ „ **வைகுதல் - தங்குதல்.**

275. பாலை குறிஞ்சி பனிமுல்லை சீர்நெய்தல்
காலை மருதமும் கற்றவனே—சால

276. உரியும் கருவும் உணர்ந்தவனே சீறும்
அரிமாவின் தோற்றத்(து) அமைச்ச—உரிய

277. அணியின் இலக்கணத்தை ஆள்வாய் பேச்சில்;
அணியிழை என்னையும் ஆள்வாய்—துணிந்த

278. உரிப்பொருள் நானுவேன் உன்வாழ்வில்;
உன்னுல்
கருப்பொருளும் ஆவேன் கனிந்து—திருவளர்

279. சொற்புணர்ச்சி கண்டவனே தொண்டுள்ளத்
தூயவனே
எற்புணர்ச்சி ஏற்பாய் இனிதாக—உற்றதோர்

---

275. 2. காலை — மருதத்தின் முதற்பொருள்.

276. 1. உரியும் கருவும் — உரிப் பொருளும் கருப் பொருளும்.

276, 2. அரிமாவின் தோற்றம் — சிங்கம் போன்ற தோற்றம்.

277. 2. அணியிழை — பெண்

278. 1. உரிப்பொருள் நானுவேன் — உன்னுடைய அக ஒழுக்கங்களுக்கு உரியவளாய் நான் இருப்பேன்.

279. 2. கருப்பொருளும் ஆவேன் - உன்னுல் கருக்கொள்ளும் பெருமகளாக மாறி, உனக்கும் எனக்கும் உள்ள தொடர்பை ஊரார்க்குப் புலப்படுத்துவேன்.

279. 1. சொற்புணர்ச்சி — சொல்லினது சேர்க்கை.

280. 2. எற்புணர்ச்கி — என்னைப் புணரும் புணர்ச்சி.

275. 279 அகப்பொருள் நூல்களில் சிறப்புற்றவன் என்பது கருத்து "ஐந்திணையும் கற்ற அருந்தெய்வம்" என இத்தோழி விடு தூது குறிப்பிடுதல் காண்க.

280. எட்டுத் தொகையுடன் ஈரைந்து பாட்டினைப்
பட்டறிவால் கற்றதோர் பாவலனே - தொட்டு

281. மகிழ்ந்து நெடுந்தொகை மாண்பினைக் காண்பாய்
திகழ்கின்ற செந்தமிழின் செல்வா—புகழ்வளர்

282. நற்றிணை கண்டவனை நற்றுணை ஆக்குவாய்
உற்றதோர் தோழீ உரைப்பாயே—கற்றோர்கள்

283. ஏத்தும் கலித்தொகை ஏந்தலை எண்ணியே
கூத்தாடும் நெஞ்சினைக் கூறுவாய்—மூத்தவர்

284. பேரறிவை முற்றுமிங்கே பெற்ற முதல்வனைப்
பாரறியச் சேர்ந்திருப்பேன் பண்புடனே
—சீராரும்

---

280. 1. ஈரைந்து பாட்டு — பத்துப்பாட்டு. எட்டுத் தொகையும் பத்தப்பாட்டும் சங்க இலக்கியம் எனப்படும்.

280. 2. பட்டறிவு — அனுபவ அறிவு.

281. 1. நெடுந்தொகை — அகநானூறு.

282. 1. நற்றிணை — எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

283. 1. கலித்தொகை — கலிப்பாவால் ஆக்கப் பெற்ற அகப்பொருள் இலக்கியம் இது. சிறந்தது; சுவையுடையது. எட்டுத்தொகை நூல்களுள் இதுவும் ஒன்று. இந்நூலை இயற்றியவர் ஐவர் என்பர்.

283. 2. கூத்தாடும் நெஞ்சு — இருதலைக் கொள்ளி எறும்புபோல்; அனலில் பட்ட புழுவைப் போல்; கடலில் அகப்பட்ட துரும்பைப் போல் வருந்தும் நிலைமை.

283. 284. மூத்தவர் பேரறிவு — தனக்கு முன்னே வாழ்ந்த பெரும்புவவர்களின் பேரறிவை எல்லாம்.

284. 2. பாரறிய - உலகெலாம் உணர.

285. அண்ணுவின் மேலாணை அன்புத் தலைவனைக்
கண்ணாரக் காண்பேன் கனிவுடனே—பண்ணாரும்

286. செந்தமிழின் மேலாணை செப்புவேன் தோழியே
முந்தி மணப்பேன் முதல்வனை—அந்திவந்தால்

287. வாடுகிறேன் ஆவினத்தின் வாயொலியால்
சீரழிந்தேன்
பாடுகின்ற கார்க்குயிலால் பாழானேன்
—ஆடுகின்ற

288. முல்லைப்பூ முன்மலர முற்றும் வனப்பிழந்தேன்
கல்லானேன் பொன்னுனேன் காசினியில்
—நல்லோர்க்கு

289. நல்லவனே எந்நாளும் நானிலத்துத் தூயவனே
இலலாமை போக்குகின்ற ஏந்தலே—வல்லவனே

---

286. 2. அந்தி வந்தால் - மாலைக்காலம் வந்தால்.

287. 1, ஆவினம் - பசுக்கூட்டம்.

287. 1. வாயொலி - கன்றினை நினைந்து வழியெல்லாம் அழைத்து வரும் குரல் ஒலி.

287. 2. கார்க்குயில் - கருமைக்குயில்; கார்காலமும் குயிலும் எனினும் பொருந்தும்.

288. 2. கல்லானேன் - தலைவனை எண்ணியெண்ணி வேறொன்றுமறியாது உணர்வற்ற கல்லானேன்.

288. 2. பொன்னுனேன் - அவனை எண்ணிக் கிடைக்கப் பெருமையால் பொன்போலும் பசலை நோய் அடைந்தேன்.

289. 3. இல்லாமை—வறுமை.

மாலைக்காலமும் ஆவினத்தின் வாயொலியும் கார்காலமும் குயிற் குரலும் முல்லைப் பூ மணமும் பிறவும் பெண்களுக்குக் காம நோயைப் பெரிது படுத்துவன என அகப்பொருள் ஆசிரியர்கள் சங்க இலக்கியங்களில் உணர்த்தியுள்ளனர். இவற்றின் சிறப்பைச் சங்க இலக்கியப் பயிற்சியுடையவர் வாய்க்கேட்டுணர்தல் நன்று.

290. ஏழ்மைக் குடிசைகள் இன்றகற்றி என்றுமே
பாழ்படா வீடளிக்கும் பாவலனே—தாழ்வுற்ற

291. பிற்பட்டோர் நன்மைகள் பேணும் பெரியோனே
உற்றென்னை மாங்கனியாய் உண்பாயே
—கற்றவனே

292. மன்னிய செந்தமிழின் மன்னவனே என்றெல்லாம்
என்னுரையை மாற்று(து) எடுத்துரைத்துப்
—பொன்போலும்

293. காதலன் கேட்கக் கனிவுடன் வாழ்த்திநல்
தூதொன்று சொல்லியே வா.

"ஐந்திலக்கண வித்தகர்," பேராசிரியர்
புலவர் ஆனை. நரசிங்கப்பெருமாள் இயற்றிய

**டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி**
**தோழி விடு தூது முற்றும்**

---

290 1. பாழ்படா வீடு - எரியாத வீடு.

292. 1. மன்னிய செந்தமிழ் - நிலைபெற்ற செந்தமிழ்.

43
9-25